Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 26 இதழ் - 1 ஜனவரி 2013

தனிப் பிரதி ரூ. 9/-



"பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறது போல
நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி
வேண்டுகிறேன்" ( III யோவான் 2)

## வாசகர்களின் அன்பான கவனத்திற்கு..

* திருமறை ஆசான் இதழைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்புவோர்கள் கடித மூலம் எங்களுக்கு கண்டிப்பாக தெரிவிக்க வேண்டும்.

* இந்தப் பத்திரிக்கை ஊழியத்தை ஜெபத்தாலும், பொருளாலும் தாங்குங்கள்.

* திருமறை ஆசான் மாத இதழை ஆன்மீக சிந்தை உள்ளவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள்.

## உங்கள் கவனத்திற்கு

✤ M.O. செய்பவர்கள் தகவலுக்கான பகுதியில் கண்டிப்பாக உங்கள் தெளிவான **விலாசம்** மற்றும் **தொலைபேசி & அலைபேசி எண்களை** எழுத வேண்டுகிறேம்.

✤ **E-M.O. செய்பவர்களும் இவ்வசதியை தபால் நிலையத்தில் கேட்டுப் பெறவும்**

## ஆசானின் போதனையில்....


1. ஆசிரியர் உரை ........................ 1
2. ஏன் நாங்கள் ஆராதனைக்காக கூடுகிறோம்? ........ 9
3. பெண்கள் பகுதி ........................ 13
4. வாலிபர் பகுதி ........................ 16
5. சிறுவர் பகுதி ........................ 20
6. நிழலும், நிஜமும் ........................ 22
7. உசியா தான் பலப்பட்டபோது... ........ 26
8. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ........ 29


✤ ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

✤ முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.

✤ இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.

✤ அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 26 JANUARY 2013 Issue - 1**


ஆசிரியர் உரை

## கர்த்தர் உன்னோடே இருக்கிறார்

சுமார் 350 ஆண்டுகளை உள்ளடக்கியுள்ள, நியாயாதிபதிகளின் காலத்தை, இஸ்ரவேல் சரித்திரத்தின் இருண்ட காலம் என்று நாம் சொன்னால், அது மிகையாகாது. ஏனெனில், மாமனிதனாகிய மோசேக்குப் பிறகு பொறுப்பேற்ற தளபதி யோசுவாவின் தலைமையின் கீழ், பெரும்பாலான வெற்றிகளைக் கண்டு, சுற்றிலுமிருந்த மக்கள் மீது கோலோச்சிய இஸ்ரவேல், நியாயாதிபதிகளின் காலத்தில் சுற்றிலுமிருந்த ராஜாக்களாலே, மிகுந்த தொல்லைக்குள்ளாக்கப்பட்டு, அடிமைத் தனத்திற்குள்ளாகப் போக்கும் வரத்துமாயிருந்தார்கள். இக்கால கட்டத்தில், இஸ்ரவேல், தேவனை விட்டுப் பிரிந்து போனதால் (2:13), தேவனும் இவர்களை விட்டு விலகிப் போனார் (2:23). சர்வ வல்லவரின் பாதுகாப்பு, இஸ்ரவேலை விட்டு விலக்கிக் கொள்ளப்பட்டதால், எதிரிகள் இவர்களை சுலபமாக மேற்கொண்டு, ஒருவர் மாற்றி ஒருவர் நையப் புடைத்தார்கள். அந்த ராஜாக்களின் கொடுமை தாங்க முடியாமல் இவர்கள் கதறுவார்கள், கூக்குரலிடுவார்கள், தேவனை நோக்கி முறையிடுவார்கள். அப்பொழுது கண்ணீரைக் காணும், நம் நல்ல கர்த்தர் இவர்கள் மீது மனதுருகி, இவர்களை இரட்சிக்கும்படியாய் ஒரு இரட்சகனை எழுப்புவார். அந்த இரட்சகரின் கீழ் கொஞ்ச நாள் அமைதியாக இருப்பார்கள். பிறகு, பழையபடி பாவம், அதினிமித்தம் மீண்டும் அடிமைத்தனம், அப்புறம் கூக்குரல், அதன் பிறகு மீண்டும் நியாயாதிபதியின் கீழ் விடுதலை என்று காரியங்கள் இப்படியாக தொடர்ந்து நடந்து வந்தது.

இப்படிச் சுழற்சியாக காரியங்கள் நடந்த ஒரு கால கட்டத்தில், இஸ்ரவேல் புத்திரர், தங்கள் பொல்லாப்பினிமித்தம் மீதியானியரின் கையில் ஒப்புக் கொடுக்கப்பட்டார்கள். மீதியானியரின் கை இஸ்ரவேல் மீது பலத்துக்

கொண்டது. ஆகவே, இஸ்ரவேல், தேவனுடைய ஜனங்கள் என்ற அந்தஸ்தோடு, தலை நிமிர்ந்து நடந்து, சமாதானத்தோடு தங்கள் பட்டணங்களின் வீதிகளில் நடமாடுவதற்குப் பதிலாக, மிருகங்களைப் போல, மலைகளிலுள்ள கெபிகளிலும், குகைகளிலும் பதுங்கியிருந்து தங்களுடைய நாட்களைக் கழித்தார்கள். (நியாதி. 6:2) இந்த மீதியானியரோ, தாங்கள் மட்டும் கொள்ளையிட்டால் போதாதென்று, அமலேக்கியரையும், கிழக்கத்தி புத்திரரையும் கூட்டுச் சேர்த்து வந்து, நிலத்தின் விளைச்சலைக் கெடுத்து, ஆடுமாடுகள், கழுதைகள் முதலானவைகளைச் சூறையாடிச் செல்வார்கள் (6:5). இப்படி எதிரிகளாலே, இஸ்ரவேல் மிகவும் சிறுமைப்பட்டது (6:6).

அப்பொழுது, ஜனங்கள் வழக்கம் போல தேவனை நோக்கி முறையிட்டார்கள். தம்முடைய பிள்ளைகளின் மனந்திரும்புதலுக்காக, ஆவலோடு காத்துக் கொண்டிருக்கும் நமது தேவன், ஒரு தீர்க்கதரிசியை அனுப்பி, "...என் சொல்லைக் கேளாதே போனீர்கள்" என்று கடிந்து கொண்டார். (வச. 6:9-10) மனிதர்களாகிய நாம் அநேக சமயங்களில் பிறரின் தவறுகளையும், குறைகளையும் சுட்டிக்காட்டுவதோடு, நம்முடைய கடமை தீர்ந்ததென்று நினைக்கிறோமல்லவா, அப்படி நமது தேவன், இடித்துரைப்பதோடு அங்கே நிற்காமல், சீரழிந்து, சிறுமைப்பட்டு நிற்கும் தன் ஜனமாகிய இஸ்ரவேலை விடுவிக்கும்படியாய், ஒரு தகுதியான நபரைத் தன் தூதன் மூலம் தேடுகிறார்.

**வானத்தையும், பூமியையும், அதிலுள்ள எல்லாவற்றையும் வார்த்தையின் வல்லமையினால் உண்டாக்கின கர்த்தர், ஒருவனோடே இருக்கிறார் என்பது எவ்வளவு விசேஷமான காரியம்.**

அப்பொழுது, ஒரு மனிதன், தன்னுடைய நிலத்தின் விளைச்சலை மீதியானியரின் கைக்குத் தப்புவிக்கிறதற்காக, ஆலைக்குச் சமீபமாய் அதைப் போரடித்துக் கொண்டிருந்தான் (நியா. 6:11). அப்பொழுது, கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமாகி; "பராக்கிரமசாலியே, கர்த்தர் உன்னோடே இருக்கிறார்" என்றார் (6:12) ஏலி, சாமுவேல் உட்பட மொத்தம் 15 நியாயாதிபதிகள் வேதாகமத்தில் இடம் பெற்றிருந்தாலும் நியாயாதிபதிகளுக்கான வேலையின் அடிப்படையில், நியாயாதிபதிகளாக இருந்தவர்கள் 13 பேரே. இந்தப் 13 பேரையும் தேவன், தன்னுடைய ஜனங்களை இரட்சிக்கும் படியாய், அந்தந்தக் காலகட்டங்களில் தெரிந்து கொண்டார். இருப்பினும், மற்ற பன்னிரெண்டு பேரையும் தெரிந்து கொண்ட போது, பயன்படுத்தப்படாத விசேஷ வார்த்தைகள், கிதியோன் நியாயாதிபதியாகத் தெரிந்து கொள்ளப்பட்டபோது பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆம், "பராக்கிரமசாலியே, கர்த்தர் உன்னோடே இருக்கிறார்" என்று தன்னுடைய தூதனைக் கொண்டு அறிவிக்கிறார்.

வானத்தையும், பூமியையும், அதிலுள்ள எல்லாவற்றையும் வார்த்தையின் வல்லமையினால் உண்டாக்கின கர்த்தர், ஒருவனோடே இருக்கிறார் என்பது எவ்வளவு விசேஷமான காரியம். அதுவும், ஒரு குறிப்பிட்ட வேலையை, அதுவும் அவருடைய நாமத்துக்கடுத்த ஒரு காரியத்தைச் செய்யும்போது, கர்த்தர் நம்முடனே கூட இருக்கிறார் என்ற வாக்குத்தத்தம் கிடைப்பது எவ்வளவு சிறப்பான காரியம். ஆகவேதான், "கர்த்தர் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்" என்று கேட்கிறார் பவுல் (ரோமர் 8:31) ஏன், கர்த்தருடைய தூதன், கிதியோனுக்கு அந்த வார்த்தைகளைச் சொன்னார் என்பது, நமக்கு முழுமையாகத் தெரியாது. ஆயினும், அச்சந்தர்ப்பத்தில் கிதியோனைப் பற்றிச் சொல்லியிருக்கும் காரியங்களை வைத்து, அதற்கான காரணங்கள் இதுவாக இருக்கலாம் என்று சிலவற்றை நாம் கண்டுபிடிக்க முடியும். ஒருவேளை, நம்முடைய இம்முயற்சியில் வெற்றி கண்டு, அவனிடமிருந்த பண்புகளைக் கண்டுபிடித்து, அவைகளை நம்முடைய வாழ்க்கையிலும் பெற்றுக் கொள்வோமானால், கர்த்தர் நம்முடனே இருக்கிறார் என்ற நம்பிக்கையை நாமும் பெற்றுக்கொள்ளமுடியும். அந்த நம்பிக்கை, புதிய வருடத்தைத் தற்போது தான் துவக்கியிருக்கும் நமக்குப் பெரிய பலமாக மாறும். அந்த பலம், இவ்வாண்டை நாம் மகிழ்ச்சியோடும், சமாதானத்தோடும் கழிக்கப் பெரிதும் உதவும்.

ஆகையால், இப்போது, தூதன், கிதியோனிடம் கர்த்தர் உன்னோடு இருக்கிறார் என்று சொன்னதற்கான காரணங்கள் எதுவாக இருக்கக் கூடும் ன்றெு சிலவற்றைக் கண்டுபிடிக்க முயற்சிப்போம்.

## I கிதியோனின் வேத அறிவு

"*கர்த்தர் உன்னோடு இருக்கிறார்* " என்று கர்த்தருடைய தூதன் சொன்னதற்கான முதல் காரணமாக நாம் காணக்கூடியது, கிதியோனின் வேத அறிவு.

ஆம், "பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார்" என்று அவனுக்குச் சொல்லப்பட்டபோது, அவன் கர்த்தருடைய தூதனிடத்தில் சொல்வதைப் பாருங்கள். "ஆ, என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டு வரவில்லையா என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே? இப்பொழுது கர்த்தர் எங்களைக் கைவிட்டு, மீதியானியர் கையில் எங்களை ஒப்புக்கொடுத்தாரே என்றான் (நியா.6:13) தேசத்தின் ஜனங்களெல்லாம் தேவனையும், அவருடைய மகத்துவங்களையும் மறந்தபடியால் தான் தேவன் அவர்களை அடிமைத்தனத்திற்கு ஒப்புக்கொடுத்தார். ஆனால், இந்த கிதியோனோ, ஏனைய எல்லோரைப் போலும் தேவனையும், அவருடைய மகத்துவங்களையும் மறந்துவிடாமல், அவைகளை தன்னுடைய மனதுக்குள்ளே வைத்து சிந்தித்துக் கொண்டிருந்திருக்கிறான். ஆகவேதான்,

கர்த்தருடைய தூதனிடத்தில் அவனால் உடனடியாக இவ்விதம் பேச முடிந்துள்ளது.

இப்படி, இவன் தேவ காரியங்களை அறிந்து வைத்திருந்தபடியால் தான், தேவன் மோசேயை அழைத்த சம்பவம் இவனுக்குத் தெரிந்திருந்தது. அங்கே, மோசே *தேவனுடைய அழைப்பை ஏற்றுக்கொள்ளத் தயங்கின போது, தேவன், அவன் கையிலிருந்த கோலைப் பாம்பாக மாற்றின சம்பவம் இவனுக்குத் தெரிந்திருந்தது.* (யாத். 4:1-5) ஆகவே தான், *இவனும் தன்னுடைய அழைப்பை உறுதி செய்து கொள்ள, தேவன் தன்னிடத்தில் விசேஷித்த முறையில் வெளிப்பட வேண்டுமென்று இரண்டுமுறை கேட்டான்.* (6:17,37,38) இப்படி அவன் கேட்டதற்கு காரணம், கண்டிப்பாக அவநம்பிக்கை அல்ல. மாறாக, வேத வசனங்கள் மீது அவன் கொண்டிருந்த நம்பிக்கையே இதற்கு அடிப்படை. ஒருவேளை, இந்தக் கிதியோன், தோமாவைப் போல் சந்தேகப்பட்டான் என்று கூட சிலர் சொல்லக்கூடும். இப்படிச் சொல்வது உண்மையாயிருக்க வாய்ப்புக் குறைவு. ஏனெனில், அவன் சந்தேக குணம் உடையவனாக இருந்திருந்தால், தேவன் அவனை இந்த வேலைக்கு அழைத்திருக்கவே மாட்டார். அப்படித்தானே.

கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே, கர்த்தர் கிதியோனோடே இருந்தற்கான காரணங்களில் ஒன்று, அவன் தேவனுடைய மகத்துவங் களை அறிந்திருந்தது. அதாவது, அவன் தேவனுடைய வார்த்தைகளை முறையாக அறிந்திருந்தது. இது என்ன பெரிய காரியமா என்று கேட்கிறீர்களா? ஆம், இது பெரிய காரியம் தான், எப்படியெனில் நம்முடைய நாட்களில், கிறிஸ்த வர்கள் என்று சொல்லிக் கொள்கிற, கிட்டத்தட்ட எல்லாருமே இக்காரியத் தில் தவறிழைத்துக் கொண்டுதான் உள்ளார்கள். தேவனுடைய வார்த்தை களை அறிய வேண்டிய அளவுக்கு அறிவதில்லை. தெரிந்து கொள்ள வேண்டிய அளவுக்குத் தெரிந்து கொள்வதில்லை. ஆகவே, மார்க்க ரீதியாக, ஒரு சீரழிந்த நிலை கிறிஸ்தவத்தை ஆட்டிப்படைத்துக் கொண்டுள்ளது. இப்படிச் சொல்கிறேன் என்று தவறாக நினைக்காதீர்கள். இது ஒரு கசப்பான உண்மை. வேத வாக்கியங்களை ஒருவன் முறையாக, சரியாக அறியா விட்டால், அவன் தப்பான செயலும், தவறான எண்ணமும் உடையவனா கவே இருப்பான். ஒரு சமயம் இயேசுவைச் சோதிக்கும்படியாக வந்த சதுசேய கூட்டத்தாரிடம், இயேசு இவ்விதம் சொன்னார். "*இயேசு அவர் களுக்கு பிரதியுத்தரமாக; நீங்கள் வேத வாக்கியங்களையும் தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங் கொள்கிறீர்கள்* " (மத். 22:29) என்று.

நமதாண்டவரின் கூற்று எவ்வளவு உண்மையாயிருக்கிறது பாருங்கள். இன்றைய கிறிஸ்தவத்தில் மலைபோல் குவிந்து கிடக்கிற பெரும்பாலான தவறுகளுக்குக் காரணம், வேத வாக்கியங்களை முறையாக அறிந்து கொள்ளாதது தான். அது குழந்தை ஞானஸ்நானமாக இருந்தாலும், முறையற்ற ஞாயிறு ஆராதனையாக இருந்தாலும், உருவ வழிபாடாக இருந்தாலும், அந்நிய பாஷை குழப்பமாக இருந்தாலும்,

அற்புத அடையாளம் என்ற பெயரில் நடக்கும் ஏமாற்றாக இருந்தாலும், வரம் பெற்றவர்கள் என்று சொல்லி அலையும் வக்கிரமாக இருந்தாலும் இவை எல்லாவற்றுக்கும் காரணம், வேத வாக்கியங்களை முறையாக அறியாதது தான். "*வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு*" (யோவான் 5:39). என்று தேவன் சொல்லும்போது, அதே தேவனுடைய பிள்ளை என்று

**தன் தகப்பன் வீட்டாருக்கும், தன் ஊராருக்கும் பிரியமா யிருப்பது நல்லதா? அல்லது தேவனுக்கு உகந்தவனாக இருப்பது உசிதமானதா என்ற நிலை வந்தபோது, தேவனுடைய பட்டசத்தில் நிற்பதைத் தெரிந்து கொண்டான்.**

சொல்லிக்கொள்ள விரும்பும் அநேகர், அதை ஆராயா விட்டால் கூட பரவாயில்லை, குறைந்தபட்சம் அவைகளைப் படிக்கக்கூட ஆர்வம் காட்டாமல் இருப்பது எப்படி நியாயமாகும்? சொல்லுங்கள். அதைப் படிப்பவர்களுக்கும், எடுத்துப் போதிப்பவர்களுக்கும் கூலி கொடுத்தால் போதும் என்று இன்றைய கிறிஸ்தவம் நினைப்பது எவ்வளவு வேதனையான காரியம். இதுதான் நிலை எனில், நமக்கு நித்திய ஜீவன் எப்படிக் கிடைக்கும்?.

அன்பானவரே, வேத வாக்கியங்களை அறிந்து கொள்ள வேண்டிய அளவுக்கு அறிந்து வைத்திருந்தபடியால்தான், "*கர்த்தர் உன்னோடு இருக்கிறார்* " என்ற வாக்குத்தத்தம் கிதியோனுக்கு கொடுக்கப்பட்டது. இவ்வுண்மையை நாம் மறந்து விட வேண்டாம்.

### II கிதியோனின் பக்தி

"*கர்த்தர் உன்னோடே இருக்கிறார்* " என்று கர்த்தருடைய தூதன் சொன்னதற்கான இரண்டாவது காரணமாக, கிதியோனுடைய பக்தியை நாம் கூறலாம்.

பக்தி என்பது ஒருவர் மீது நாம் காட்டும் சாதாரண அன்பை விட மேலானது. அது, ஒருபடி மேலானதா அல்லது பல மடங்கு அதிகமானதா என்பது அவரவரைப் பொருத்தது. ஆனால், இங்கே, தேவன் மீது கிதியோன் கொண்டிருந்த பக்தி அசாதாரணமானது. பக்திக்காக, அவன் எதை வேண்டுமானாலும் செய்யவும், தன்னுடைய தேவபக்திக்காக யாருக்கு விரோதமாக வேண்டுமானாலும் செயல்படவும் ஆயத்தமாக இருந்துள்ளான்.

இங்கே வசனத்தைக் கவனியுங்கள். " *அன்று ராத்திரியிலே கர்த்தர் அவனை நோக்கி; நீ உன் தகப்பனுக்கு இருக்கிற காளைகளில், ஏழு வயதான இரண்டாம் காளையைக் கொண்டு போய், உன் தகப்பனுக்கு இருக்கிற பாகாலின் பலிபீடத்தைத் தகர்த்து, அதின் அருகேயிருக்கிற தோப்பை வெட்டிப்போட்டு, இந்தக் கற்பாறை உச்சியிலே பாங்கான ஒரு இடத்தில், உன் தேவனாகிய கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, அந்த*

*இரண்டாம் காளையைக் கொண்டுவந்து, அதை நீ வெட்டிப்போட்ட தோப்பி னுடைய கட்டை விறகு களின் மேல் சர்வாங்க தகனமாகப் பலியிடக்கடவாய் என்றார்* " (நியா.6:25,26).

தேவன் அவனை, அவனுடைய தகப்பன் வீட்டாருக்கும், அவனுடைய ஊராருக்கும் எதிராகச் செயல்படும்படி சொல்கிறார். இப்படிச் செயல் படுவது ஒரு சாதாரண காரியமல்ல. எப்படியெனில், *அந்நாட்களில், தேசம் முழுவதும் பாகாலுக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தபடியால் பாகாலுக்கு விரோதமாகச் செயல்படுவது, பெருங்குற்றமாகக் கருதப் பட்டது. ஆனாலும் கூட, அவன் மாறுத்தரம் எதுவும் சொல்லாமல் உடனடி யாக, ஒரு பத்துப் பேரைச் சேர்த்துக் கொண்டு தேவன் எதைச் செய்யச் சொன்னாரோ அதை கனகச்சிதமாகச் செய்து முடித்தான்* (6:27). தன் தகப்பன் வீட்டாருக்கும், தன் ஊராருக்கும் பிரியமாயிருப்பது நல்லதா? அல்லது தேவனுக்கு உகந்தவனாக இருப்பது உசிதமானதா என்ற நிலை வந்தபோது, தேவனுடய பட்டசத்தில் நிற்பதைத் தெரிந்து கொண்டான். இது, " *தகப்பனையும், தாயையும் என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல என்று, நமதாண்டவரின் கூற்றை நமக்கு நினைவு படுத்துகிறது* " (மத். 10:37).

அன்பானவர்களே, இந்த கிதியோனைப் போல நம்மில் எத்தனைப் பேர் தேவனுக்காக, அவருடைய வார்த்தைகளுக்காக, கிறிஸ்துவுக்காக, அவருடைய சபைக்காக செயல்படுவதற்கு ஆயத்தமாக உள்ளோம்? தேவனுடைய வார்த்தை அவனுக்கு அறிவிக்கப்பட்டவுடன் அவன் எதையுமே யோசிக்கவில்லை. அந்த வார்த்தையை நிறைவேற்ற வேண்டுமென்பதே அவனுக்குப் பிரதான நோக்கமாக இருந்தது. அவன் தேவன் மீது வைத்த பக்தி எப்படிப்பட்டதென்று பாருங்கள். " என்னை அனுப்பினவருடைய சித்தத்தின் படி செய்து, அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜன மாயிருக்கிறது " (யோவான் 4:34) என்று நமதாண்டவர் சொன்னது போல், தன்னைத் தெரிந்து கொண்டவரின் கட்டளையை நிறைவேற்றுவதே கிதியோனுக்கும் போஜனமாயிருந்துள்ளது.

இதை வாசித்துக்கொண்டிருக்கும் நண்பரே, நம்முடைய பக்தியின் நிலை எப்படியுள்ளது? அது மெய்பக்தியா? அல்லது பொய்பக்தியா? சொல்லுங்கள். உபதேச விஷயத்தில் அதாவது, ஒருவன் கிறிஸ்தவனாக எப்படி மாறுவதென்பது குறித்தும், எப்படி வாழவேண்டுமென்பது குறித்தும் தேவனுடைய வார்த்தைகள் தெளிவாக இருந்தும், அதைக் ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறோமே அது எப்படி மெய் பக்தியாகும்? கிதியோன் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளத் தயங்கினானா? நம்முடை குடும்பத்தாரைக் குறித்தும், சமுதாயத்தைக் குறித்தும் அநேக சமயங்களில் கலங்குகிறோமே அதுபோல் அவன் கலங்கினானா? இல்லை. இல்லவே இல்லை. "கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்று பிள்ளையாண்டான் சாமுவேல் சொன்னதைப் போல்தான் அவனுடைய மனநிலையும் இருந்தது. கிறிஸ்து வைப் பின்பற்ற விரும்பும் ஒவ்வொருவனுக்கும் அப்படிப்பட்ட மனநிலை

இருப்பது அவசியம். கிதியோனோடே இருந்த கர்த்தர், நம்மிடத்திலும் இருந்து வழிநடத்த வேண்டுமானால், கிதியோனுக்கிருந்த பக்தியைப் போன்ற பக்தி நமக்கும் இருப்பது அவசியம்.

### III கிதியோனின் கீழ்ப்படிதல்

"*கர்த்தர் உன்னோடே இருக்கிறார்* " என்று கர்த்தருடைய தூதன் சொன்னதற்கான, இன்னொரு காரணமாக, நாம் கிதியோனுடைய கீழ்ப் படிதலைக் கூற முடியும்.

தேவனுடைய பிள்ளைகளுக்கு இருக்க வேண்டிய முக்கியமான குணங்களில் முதன்மையானது கீழ்ப்படிதல். தேவனைப் பின்பற்ற விரும்பும் ஒவ்வொருவருக்கும் இக்குணம் இருப்பது அவசியம் என்பதை வேதம்

**தமக்குக் கீழ்ப்படிந்தவர்களைத் தான் தேவன் அங்கீகரித் துள்ளார். இன்னும் தமக்குக் கீழ்ப்படிந்தவர்களைத் தான் தேவன் அந்தந்தக் காலகட்டங்களில் தமக்காக பயன் படுத்தியுள்ளார்.**

சாமுவேல் புத்தகத்தில் எவ்வளவு தெளிவாகக் கூறுகிறதென்று பாருங்கள். "அதற்கு சாமுவேல்; கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும், பலிகளும் கர்த்தருக்கு பிரியமாயிருக் குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத் தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்" (1 சாமு. 15:22). இன்னும், ஞானி சாலமோன், " வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிற வனுடைய ஜெபம் அருவருப்பானது " என்று சொல்லி கீழ்ப்படிதலை வலியுறுத்துகிறார் (நீதி. 28:9). நம்முடைய கிதியோனிடத்தில், வேதத்தைக் கேட்பதும் அதற்கு செவிகொடுப்பதும், அதற்குக் கீழ்ப்படிவதும் பிரதான காரியமாக இருந்துள்ளது.

ஆம், தேவன் இவனை அழைத்தபோது, கர்த்தர் எங்களோடே இருந்தால் இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன் என்றும், எங்கள் பிதாக்கள் விவரித்துச் சொன்ன அற்புதங்களெல்லாம் எங்கே என்றும் கேள்வி கேட்டான். இவன் தேவனிடத்தில், கேட்ட கேள்விகளுக்கு அங்கே, நேரிடையாக பதில் கிடைக்கவில்லை. மாறாக, " உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ " என்று மாத்திரம் சொல்லப்பட்டது. ஆயினும், கர்த்தரின் காரியமாகப் போவதற்கு அவன் தன்னை முற்றிலும் ஆயத்தமாக்கிக் கொண்டான். நாமாக இருந்தால் என்ன செய்திருப்போம்? நம்முடைய கேள்விகளுக்கு தேவன் பாராமுகமாக இருக்கிறார். முதலில், நான் கேட்பதை அவர் எனக்குச் செய்யட்டும். பிறகு நான் அவருக்குக் கீழ்ப் படிவதைக் குறித்து யோசிக்கிறேன் என்று சொல்லியிருப்போம். ஆனால், இந்த கிதியோன், தேவ சத்தத்திற்கும், தேவனுடைய சித்தத்திற்கும் தன்னை ஒப்புக்கொடுத்தான். அப்பொழுது, பரலோகத்தில் தேவன் இவனைத்


தனக்காகப் பயன்படுத்தினார். தேவனுக்காக வல்லமையான காரியங்களை இவன் செய்தான்.

அருமையானவர்களே, தேவனுக்குக் கீழ்ப்படிவதில் நாம் எப்படி? நமதாண்டவரைக் குறித்து எபிரெய ஆசிரியர் " அவர் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே, கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்...." என்று கூறு கிறார் (எபி. 5:8). அங்கே நாம் கவனித்தால், தேவ குமாரனே கீழ்ப்படிந்தார். தேவ குமாரனுக்கே கீழ்ப்படிதல் அவசியமாயிருந்தது. அப்படியானால், நமக்கு? அதைச் சொல்லவே தேவையில்லை. தமக்குக் கீழ்ப்படிந்தவர் களைத் தான் தேவன் அங்கீகரித்துள்ளார். இன்னும் தமக்குக் கீழ்ப்படிந்தவர் களைத் தான் தேவன் அந்தந்தக் காலகட்டங்களில் தமக்காக பயன்படுத்தி யுள்ளார். எபிரெயர் 11-ம் அதிகாரத்திலுள்ள, விசுவாசிகளின் பட்டியலில் இடம் பெற்றுள்ள விசுவாச வீரர்களெல்லாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவர்களே.

அதுமாத்திரமல்ல, புதிய ஏற்பாட்டின் கீழ் வாழ்கிற நாம் நம்முடைய இரட்சிப்பை நிறைவேற்றிக் கொள்வதற்கும் கீழ்ப்படிதல் மிகவும் அவசியம். அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பி பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது, இது குறித்து எவ்வளவு அழகாக எடுத்துரைக்கிறார் பாருங்கள். "ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்போதும் கீழ்ப்படிகிற படியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும் போது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும், அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுங்கள்" (பிலி. 2:12).

அன்பானவர்களே, இன்றைக்கு நம்மில் எத்தனை பேர், நம்முடைய இரட்சிப்பு நிறைவேற பயத்தோடும், நடுக்கத்தோடும் தேவனுக்கும், அவர் தந்த பரிசுத்த வார்த்தைகளுக்கும் கீழ்ப்படிகிற பிள்ளைகளாகயிருக்கி றோம்? தயவு செய்து நெஞ்சிலே கையை வைத்துச் சொல்லுங்கள் பார்க்கலாம்? இன்றைய கிறிஸ்தவத்தின் பயமும், பக்தியும், கீழ்ப்படிதலும் எந்தளவு உள்ளது? கீழ்ப்படிதல் இருக்க வேண்டிய கிறிஸ்தவத்தில், கேளிக்கைகள் மிகுந்து காணப்படுகிறதே, எப்படி? அமைதி இருக்க வேண்டிய கிறிஸ்தவத்தில் ஆட்டமும், ஆர்ப்பாட்டமும் காணப்படுகிறதே, அது ஏன்? சொல்லுங்கள். பயமும், பக்தியும் இல்லாததே இந்த இழி நிலைக்குக் காரணம், யாராவது, இந்த உண்மையை மறுக்க முடியுமா? நாம் ஒவ்வொருவரும் பயத்தோடும், பக்தியோடும் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்றே அவர் எதிர்பார்க்கிறார்.

ஆகவே, அருமையான தேவனுடைய பிள்ளைகளே, இப்பொழுது நாம் பார்த்த இந்த கிதியோனைப் போல, தேவனுடைய வார்த்தைகள் மற்றும் மகத்துவங்களைப் பற்றிய ஆழ்ந்த அறிவு உள்ளவர்களாகவும் கிறிஸ்துவைப் பற்றியும், அவருடைய உபதேசங்கள் பற்றியும் தெளிவுள்ள வர்களாகவும் கிதியோனைப் போல தேவனுக்காக எல்லாவற்றையும் செய்கின்ற அளவுக்கு அவர் மீது பக்தியுள்ளவர்களாகவும், கிதியோனைப் போல, தேவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிகிறவர்களாகவும் இருப்போமாக! அப்படி நாம் இருந்தால், கிதியோனோடே இருந்த கர்த்தர், நம்மோடே கூட இருந்து, நம் வாழ் நாள் முழுவதும் நம்மைக் காத்துக் கொள்வார். ஆமென்.



# ஏன் நாங்கள் ஆராதனைக்காக கூடுகிறோம்?

**J.C. சோட்**

**நா**ங்கள் கிறிஸ்தவர்களாக, கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர்களாக, வாரத்தின் முதல் நாள் தோறும் தேவனை ஆராதிக்கும் நோக்கத்திற்காகக் கூடி வருகிறோம். நாங்கள் இப்படியாகக் கூடுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

முதலாவது, நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய ஒரே தேவன் தான் இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். அவர் நம்முடைய சிருஷ்டிகரும், எல்லா ஆசீர்வாதங்களையும் தருகிறவருமாயிருக்கிறார். அவருடைய அன்பினாலும், அவருடைய குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்தின் பாவங்களுக்காக அனுப்பிக் கொடுத்ததினாலும், அவருடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும் நமக்கு இரட்சிப்பை சாத்தியப்படுத்தியிருக்கிறார். அவருடைய பிள்ளைகளாயிருக்கிற நாம் அவருக்காக வாழவும், சேவை செய்யவும், அவர் சொல்லியிருக்கிறபடி அவருக்கு ஆராதனை செய்யவும் விரும்புகிறோம். " *தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்* " என்று கிறிஸ்து சொன்னார் (யோவான் 4:24). நாங்கள் சேவிக்கும் தேவன் மனிதனும் அல்ல, மிருகமும் அல்ல, உயிரற்ற ஒரு பொருளும் அல்ல. அவர் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், ஒரு விலங்கு, ஒரு மலை அல்லது மனிதனால் உண்டாக்கப்பட்ட ஒரு சொரூபம் போன்றவற்றை அடையாளப்படுத்துவதில்லை. அவர் ஆவியாயிருக்கிறார். அவரே எல்லாவற்றையும் உண்டாக்கினவரும், ஜீவனைத் தருபவரும், போஷிப்பவருமாயிருக்கிறார். மதிகேடன் தான் அப்படிப்பட்ட தேவனை இல்லையென்று மறுப்பான் (சங். 14:1).

நாம் ஏறெடுக்கும் ஆராதனையில் சேவித்தல், துதித்தல், கனப்படுத்துதல் போன்றவை இடம்பெற்று பரலோகத்தின் தேவனை நோக்கி ஏறெடுக்கப்படுகிறது. நம்முடைய ஆராதனை ஆவியில் செய்யப் படுகிறது. அதாவது, நாங்கள் செய்பவைகளை எல்லா நேர்மையோடும், தாழ்மையோடும், செய்கின்ற காரியங்களில் மனதை முழுமையாக ஈடுபடுத்திச் செய்கிறோம்.


நாம் ஆராதனையை உண்மையோடும் செய்கிறோம். அதாவது, நாம் சத்தியத்தின்படி அல்லது தேவன் தமது வார்த்தைகளில் எவைகளைச் சொல்லியிருக்கிறாரோ அவைகளின்படி ஆராதிக்கிறோம். நாங்கள்

தேவனை ஆராதிக்கிறபடியால் நாங்கள் எங்களை பிரியப்படுத்த முயற்சிக் காமல், தேவனை பிரியப்படுத்த விரும்புகிறோம்.

இதன் பொருள், நாம் தேவனை மனுஷருடைய உபதேசங்களின் படியும், கட்டளைகளின்படியும் ஆராதிக்கக் கூடாது (மத். 15:9). அது போல, நம்முடைய அறியாமையுள்ள ஆராதனையிலோ, (அப். 17:23) அல்லது உண்மையாகவும், நேர்மையாகவும் ஒன்று இருந்துவிட்டால் போதும் நாம் எப்படி ஆராதித்தாலும் அவர் அதை ஏற்றுக்கொள்வார் என்று நம்முடைய நிலையை நியாயப்படுத்தும் முயற்சியிலோ தேவன் பிரியப்படுவதில்லை. நாம் எப்படி ஆராதிக்கிறோம் என்பது அவருடைய பார்வையில் முக்கிய மானதாக உள்ளது. இல்லையென்றால், தேவன் இந்தக் காரியத்தைக் குறித்து பேசியிருக்கமாட்டார்.

வேதாகமத்தின் போதனையின்படி, கிறிஸ்தவர்களாக நாங்கள் வாரத்தின் முதல் நாள் தோறும் ஆராதனைக்காகக் கூடி வருகிறோம். இதற்கான உதாரணம் நமக்கு அப். 20:7-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கை யில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான் என்று வாசிக்கிறோம். பழைய ஏற்பாட்டு பிரமாணத்தின்படி, ஓய்வு நாள் ஆராதனை நாளாக இருந்தது. ஆனால், கிறிஸ்து சிலுவையில் மரித்த போது, பழைய பிரமாணத்தை எடுத்துப்போட்டு, அதற்கு பதிலாகப் புதிய பிரமாணத்தைக் கொடுத்தார் (கொலோ. 2:14). பழைய பிரமாணம் எடுத்துப் போடப்பட்ட படியால், ஓய்வு நாளும் ஆராதனை நாள் என்பதிலிருந்து எடுத்துப் போடப்பட்டது. கிறிஸ்து வாரத்தின் முதல் நாளிலே கல்லறையிலிருந்து உயிரோடு எழுந்தார் என்று நாம் வாசிக்கிறோம் (மத். 28:1-6). அது போலவே, நற் செய்தியானது வாரத்தின் முதல்நாளிலே பிரசங்கிக்கப்பட்டு அந்நாளில் தானே சபை ஸ்தாபிக்கப்பட்டது (அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரம்). கடைசியாக, பவுல் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு வாரத்தின் முதல் நாளிலே தங்கள் வருமானத்திலிருந்து கர்த்தருக்குக் காணிக்கை கொடுக்க வேண்டும் என்று எழுதினார். ஆனால், கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாள் தோறும் கூட வேண்டும் என எங்குமே சொல்லப்படவில்லை என்று ஒருவேளை நீங்கள் சொல்லலாம். அப்படிப் பார்த்தால், பழைய ஏற்பாட்டின் கீழும் ஒவ்வொரு ஓய்வு நாளையும் ஆசரிக்க வேண்டும் என்று தேவன் எங்குமே சொல்லவில்லையே. உண்மையென்னவென்றால், ஒவ்வொரு வாரத்திற்கும் முதல் நாள் இருக்கிறது. அந்த ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளும் கர்த்தரை ஆராதிக்கும்படியான கர்த்தருடைய நாளாக இருந்தால், கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் அந்த நோக்கத்திற்காகக் கூடி வரவேண்டும்.

இப்போது, நாம் வாரத்தின் முதல் நாளிலே தேவனை ஆராதிக்கும் படியாகக் கூடும்போது என்ன செய்ய வேண்டும்? வசனங்களில் அநேக காரியங்களில் பட்டியலிடப்பட்டிருக்கிறது. அப். 20:7-ல் குறிப்பிட்டிருக்கிறபடி,



# ஏன் நாங்கள் ஆராதனைக்காக கூடுகிறோம்?

## J.C. சோட்

நாங்கள் கிறிஸ்தவர்களாக, கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர்களாக, வாரத்தின் முதல் நாள் தோறும் தேவனை ஆராதிக்கும் நோக்கத்திற்காகக் கூடி வருகிறோம். நாங்கள் இப்படியாகக் கூடுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

முதலாவது, நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய ஒரே தேவன் தான் இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். அவர் நம்முடைய சிருஷ்டிகரும், எல்லா ஆசீர்வாதங்களையும் தருகிறவருமாயிருக்கிறார். அவருடைய அன்பினாலும், அவருடைய குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்தின் பாவங்களுக்காக அனுப்பிக் கொடுத்ததினாலும், அவருடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும் நமக்கு இரட்சிப்பை சாத்தியப்படுத்தியிருக்கிறார். அவருடைய பிள்ளைகளாயிருக்கிற நாம் அவருக்காக வாழவும், சேவை செய்யவும், அவர் சொல்லியிருக்கிறபடி அவருக்கு ஆராதனை செய்யவும் விரும்புகிறோம். '' *தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்* '' என்று கிறிஸ்து சொன்னார் (யோவான் 4:24). நாங்கள் சேவிக்கும் தேவன் மனிதனும் அல்ல, மிருகமும் அல்ல, உயிரற்ற ஒரு பொருளும் அல்ல. அவர் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், ஒரு விலங்கு, ஒரு மலை அல்லது மனிதனால் உண்டாக்கப்பட்ட ஒரு சொரூபம் போன்றவற்றை அடையாளப்படுத்துவதில்லை. அவர் ஆவியாயிருக்கிறார். அவரே எல்லாவற்றையும் உண்டாக்கினவரும், ஜீவனைத் தருபவரும், போஷிப்பவருமாயிருக்கிறார். மதிகேடன் தான் அப்படிப்பட்ட தேவனை இல்லையென்று மறுப்பான் (சங். 14:1).

நாம் ஏறெடுக்கும் ஆராதனையில் சேவித்தல், துதித்தல், கனப்படுத்துதல் போன்றவை இடம்பெற்று பரலோகத்தின் தேவனை நோக்கி ஏறெடுக்கப்படுகிறது. நம்முடைய ஆராதனை ஆவியில் செய்யப் படுகிறது. அதாவது, நாங்கள் செய்பவைகளை எல்லா நேர்மையோடும், தாழ்மையோடும், செய்கின்ற காரியங்களில் மனதை முழுமையாக ஈடுபடுத்திச் செய்கிறோம்.

நாம் ஆராதனையை உண்மையோடும் செய்கிறோம். அதாவது, நாம் சத்தியத்தின்படி அல்லது தேவன் தமது வார்த்தைகளில் எவைகளைச் சொல்லியிருக்கிறாரோ அவைகளின்படி ஆராதிக்கிறோம். நாங்கள்

தேவனை ஆராதிக்கிறபடியால் நாங்கள் எங்களை பிரியப்படுத்த முயற்சிக் காமல், தேவனை பிரியப்படுத்த விரும்புகிறோம்.

இதன் பொருள், நாம் தேவனை மனுஷருடைய உபதேசங்களின் படியும், கட்டளைகளின்படியும் ஆராதிக்கக் கூடாது (மத். 15:9). அது போல, நம்முடைய அறியாமையுள்ள ஆராதனையிலோ, (அப். 17:23) அல்லது உண்மையாகவும், நேர்மையாகவும் ஒன்று இருந்துவிட்டால் போதும் நாம் எப்படி ஆராதித்தாலும் அவர் அதை ஏற்றுக்கொள்வார் என்று நம்முடைய நிலையை நியாயப்படுத்தும் முயற்சியிலோ தேவன் பிரியப்படுவதில்லை. நாம் எப்படி ஆராதிக்கிறோம் என்பது அவருடைய பார்வையில் முக்கிய மானதாக உள்ளது. இல்லையென்றால், தேவன் இந்தக் காரியத்தைக் குறித்து பேசியிருக்கமாட்டார்.

வேதாகமத்தின் போதனையின்படி, கிறிஸ்தவர்களாக நாங்கள் வாரத்தின் முதல் நாள் தோறும் ஆராதனைக்காகக் கூடி வருகிறோம். இதற்கான உதாரணம் நமக்கு அப். 20:7-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கை யில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான் என்று வாசிக்கிறோம். பழைய ஏற்பாட்டு பிரமாணத்தின்படி, ஓய்வு நாள் ஆராதனை நாளாக இருந்தது. ஆனால், கிறிஸ்து சிலுவையில் மரித்த போது, பழைய பிரமாணத்தை எடுத்துப்போட்டு, அதற்கு பதிலாகப் புதிய பிரமாணத்தைக் கொடுத்தார் (கொலோ. 2:14). பழைய பிரமாணம் எடுத்துப் போடப்பட்ட படியால், ஓய்வு நாளும் ஆராதனை நாள் என்பதிலிருந்து எடுத்துப் போடப்பட்டது. கிறிஸ்து வாரத்தின் முதல் நாளிலே கல்லறையிலிருந்து உயிரோடு எழுந்தார் என்று நாம் வாசிக்கிறோம் (மத். 28:1-6). அது போலவே, நற் செய்தியானது வாரத்தின் முதல்நாளிலே பிரசங்கிக்கப்பட்டு அந்நாளில் தானே சபை ஸ்தாபிக்கப்பட்டது (அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரம்). கடைசியாக, பவுல் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு வாரத்தின் முதல் நாளிலே தங்கள் வருமானத்திலிருந்து கர்த்தருக்குக் காணிக்கை கொடுக்க வேண்டும் என்று எழுதினார். ஆனால், கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாள் தோறும் கூட வேண்டும் என எங்குமே சொல்லப்படவில்லை என்று ஒருவேளை நீங்கள் சொல்லலாம். அப்படிப் பார்த்தால், பழைய ஏற்பாட்டின் கீழும் ஒவ்வொரு ஓய்வு நாளையும் ஆசரிக்க வேண்டும் என்று தேவன் எங்குமே சொல்லவில்லையே. உண்மையென்னவென்றால், ஒவ்வொரு வாரத்திற்கும் முதல் நாள் இருக்கிறது. அந்த ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளும் கர்த்தரை ஆராதிக்கும்படியான கர்த்தருடைய நாளாக இருந்தால், கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் அந்த நோக்கத்திற்காகக் கூடி வரவேண்டும்.

இப்போது, நாம் வாரத்தின் முதல் நாளிலே தேவனை ஆராதிக்கும் படியாகக் கூடும்போது என்ன செய்ய வேண்டும்? வசனங்களில் அநேக காரியங்களில் பட்டியலிடப்பட்டிருக்கிறது. அப். 20:7-ல் குறிப்பிட்டிருக்கிறபடி,

கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும்படி அல்லது அப்பம் பிட்கும்படி கூடியிருக்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு, அப்பமானது கிறிஸ்துவின் சரீரத்தை நினைவுகூரும்படி புசிக்கப்பட வேண்டும் என்றும், பாத்திரத்தில் பானம் பண்ணுவது கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவு கூரும்படி செய்யப்பட வேண்டும் என்றும் கூறுவதை தயவு செய்து கவனியுங்கள். (1கொரி. 11:23-29) வேறுவிதமாகச் சொன்னால், கர்த்தர் அவருடைய ஜனங்கள் இரட்சிக்கப் படும்படி, தான் செலுத்தின கிரயத்தைத் தொடர்ந்து நினைவு கூருகிறவர் களாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார். கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதன் மூலமாக, கிறிஸ்தவர்கள் சிலுவையைத் திரும்பி பார்க்கிறார்கள். பந்தியில் பங்கு பெறுவதால், கிறிஸ்தவர்கள் கிறிஸ்து மீண்டும் வருவார் என்பதைத் தெரிவிக்கிறார்கள். எனவே, கர்த்தருடைய பந்தி மிகமுக்கியமானது. இதில் பங்கு பெறும் வேளையானது ஆவிக்குரிய பிரகாரமாக ஒருவர் கர்த்தருக்கு முன்பாக எங்கே நிற்கிறார் என்று தன் சொந்த ஜீவியத்தை சோதித்தறியும் சந்தர்ப்பமாக இருக்கும். இது, கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைப் பற்றிய மதிப்பு மிக்க பாடங்களை உலகிற்கு கற்றுக் கொடுக்க ஒரு வாய்ப்பைக் கொடுக்கின்றது.

அடுத்ததாக, கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிக்கும்படி வாரத்தின் முதல் நாளிலே கூட வேண்டும்; அப்படி அவர்கள் செய்யும் போது, கர்த்தரு டைய வேலைக்காக கர்த்தருக்கு காணிக்கை கொடுக்க வேண்டும். பவுல் இப்படியாகச் சொன்னார். *“பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்ம பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டு சபைகளுக்குப் பண்ணினத் திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும் போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும், தன்தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன்”* என்று (கொரி. 16:1,2). மேலும், II கொரி. 9:6,7 வசனங்களில் பவுல், *“பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன், சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான், அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்”*. நிச்சயமாகவே *“வாங்குகிறதைப் பார்க்கிலும், கொடுக்கிறதே பாக்கியம்”* என்று இயேசு சொன்னார் என்று சொல்லி யுள்ளார் (அப். 20:35). பழைய பிரமாணத்தின் கீழ் வாழ்ந்த தேவனுடைய ஜனங்கள், தங்கள் சம்பாத்தியத்தில் தசமபாகம் அல்லது பத்தில் ஒரு பகுதியை தேவனுக்குக் கொடுக்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருந் தார்கள். ஆனால், அந்தப் பிரமாணம் இப்போது நடைமுறையில் இல்லை. நாம் கிறிஸ்தவர்களாக நம்முடைய வருமானத்திற்கு ஏற்ப கொடுக்க வேண்டும். அப்படியானால், அது எவ்வளவு? அது பத்தில் ஒரு பங்குக்கு மேல் என்பதில் சந்தேகமில்லை. நிச்சயமாகவே, கிறிஸ்துவின் காலத்திற்கு முன்பு வாழ்ந்தவர்களைக் காட்டிலும் நமக்கு மாபெரும் ஆசீர்வாதங்களும், வாக்குத்தத்தங்களும் இருக்கின்றன.

நாம் தேவனைத் துதிக்கும்படியான ஸ்தோத்திரப் பாடல்களைப் பாடும்படியாக வாரத்தின் முதல் நாளிலே கூட வேண்டும். கொலோ. 3:16,17 வசனங்களில் பவுல், " *கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி; வார்த்தையினாலாவது கிரியையினாலாவது நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்*" என்று கூறுகிறார். நீங்கள் பார்க்கின்றபடி இந்த வசனத்திலும், வேறு வசனப் பகுதிகளிலும் தேவனுக்கு ஸ்தோத்திரப் பாடல்களைப் பாடுவது வலியுறுத்தப்படுகிறது. எபிரெய ஆசிரியர் சொல்லும் போது, " உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை தேவனுக்குச் செலுத்த வேண்டும் ". என்று சொல்கிறார் (எபி. 13:15). நாங்கள் கர்த்தருடைய ஜனங்களாக ஆராதனையில் இசைக்கருவிகளை பயன்படுத்துவதில்லை.

ஆனால், ஆராதனையில் இசைக்கருவிகளை வாசிப்பதினால் என்ன தவறு இருக்கிறது? வாசிக்காமல் இருப்பதில் அப்படி என்ன நன்மை அதில் இருக்கிறது? பாடுவதினால் மாத்திரம் நாம் தேவனை ஆராதிக்க முடியாதா? நம்மால் அப்படி முடியும் என்று உங்களுக்குத் தெரியும். ஆகையால், வேத வாக்கியங்கள் தெளிவாக போதிக்கின்றபடி நாம் பாடல்களை மாத்திரம் பாடுவோம். அதற்குமேல் போவது, கர்த்தருடைய அதிருப்தியை சம்பாதிப்ப தாகிவிடும்.

கடைசியாக, வாரத்தின் முதல் நாளிலே, கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனை ஆராதிப்பதற்காக, சபையாகக் கூடி வந்து தேவன் தம்முடைய வார்த்தை மூலமாக நம்மிடம் பேசவும், நாம் தேவனிடத்தில் ஜெபத்தின் மூலமாக பேசவும் அனுமதிக்க வேண்டும். நாம் வசனத்தைப் படிக்கும் படியாக ஊக்கப்படுத்தப்பட்டிருக்கிறோம் (II தீமோத். 2:15). நாம் தேவ வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்படியாக கிறிஸ்து கேட்டுக்கொண்டார் (யோவான் 5:39). ஆதிக்கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத் திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலி லும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப். 2:42). வேதத்தைப் படித்தலும், ஜெபமும் இல்லாமல் தேவனை ஆராதிப்பது எப்படி சாத்தியம்?

நீங்கள் தேவனை ஆராதிக்கிறீர்களா? வழக்கமாக நீங்கள் அப்படிச் செய்கிறீர்களா? நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? அப்படி இல்லையென்றால், தேவன் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக அவரை ஆராதிக்க நீங்கள் தேவனோடு சரியான உறவில் இல்லை. நீங்கள் ஒரு கிறிஸ்தவனாகும்படி நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்று கிறிஸ்து சொல்லியிருக்கிறார் (மாற்கு16:16). அப்படி நீங்கள் செய்தால் கிறிஸ்து உங்களை தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார் (அப். 2:47). அப்போது உங்களாலும் ஆராதிக்க முடியும்.

பெண்கள் பகுதி

# தெபொராள் ஞானமும், தைரியமும் நிறைந்த ஸ்திரீ



**RACHEAL NAYAGAM**

**எ**ல்லாக் காலத்திலும் மிகவும் சிறந்து விளங்கின பல ஸ்திரீகளில் தெபொராள் ஒருவள். மனைவியாக, தாயாக, தீர்க்கதரிசியாக, நியாயாதிபதியாக, கவிதை எழுதுபவராக, பாடகியாக, போரில் முன் நின்று தலைமையேற்றவளாக இப்படி பல பொறுப்புகளுக்கு மத்தியிலும் தேவனுக்காக வாழ்க்கையை அர்ப்பணித்த ஒரு மாபெரும் ஸ்திரீயாக இன்று நமக்கு முன் நிற்கும் இந்த ஸ்திரீயிடம் இப்புதிய வருடத்திலே கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம் சில பாடங்களைக் கற்றுக் கொள்வோம்.

கானானிய இராஜாவாகிய யாபீன் தொளாயிரம் இருப்பு ரதங்களை வைத்திருந்தான். அவன் இஸ்ரவேல் புத்திரரை இருபது வருஷம் கொடுமையாய் ஒடுக்கினான் (நியா. 4:3). இந்த கால கட்டத்தில்தான், தேவன் தன் மக்களை நியாயம் விசாரிப்பதற்காக தெபொராளைத் தெரிந்து கொண்டார். அவள் எப்பிராயீம் மலைத் தேசமான ராமாவுக்கும், பெத்தேலுக்கும் நடுவிலிருக்கிற தெபொராளின் பேரீச்சமரத்தின் கீழே குடியிருந்தாள். அங்கே இஸ்ரவேல் புத்திரர் அவளிடத்திற்கு நியாய விசாரணைக்குப் போவார்கள்.

**தெபொராள் நாட்களின் நிலை :** இஸ்ரவேல் புத்திரர் திரும்பக் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து வந்தார்கள். எனவே, தேவன் அவர்களை அவர்கள் பகைவர் கைக்கு விற்றுப் போட்டார் (நியா. 4:1). நியாயாதிபதிகள் புத்தகத்தின் கருப்பொருளே இதுதான். இவளுக்கு முன் இரண்டு முறையும், இவளுக்குப் பின் மூன்று முறையும் இப்படிச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இஸ்ரவேல் ஜனங்கள் புறஜாதிகளுடன் சேர்ந்து தீமை செய்ய முற்பட்டார்கள். விளைவு வீழ்ச்சி. இஸ்ரவேல் மக்கள் தங்கள் பார்வைக்கு எது சரியோ அதை செய்தார்கள் (17:6;21-25) இவ்வாறு செய்வதின் முடிவு அழிவுதான்.

**ஏதாவது ஒன்று செய்யப்பட வேண்டும் :** இஸ்ரவேல் மக்கள் தேவனை அறிந்திருந்த காரணத்தினால் தேவன் எப்படியோ தம் நாம மகிமைக்கென்று அவர்களை நினைவுகூருகிறார். பாவம் செய்யும் பொழுது தேவன் அவர்களை பகைவர்களின் கையில் ஒப்புக் கொடுத்து மனந்திரும்பும்படி ஒரு தருணத்தை ஏற்படுத்துகிறார். தெபொராளின் நாட்களிலும் நிலைமை இப்படித் தான் இருந்தது. ஜனங்கள் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள் (4:3). இவர்களைக் காப்பதற்காக தேவன் தெபொராளை தெரிந்தெடுக்கிறார். ஏன் தெபொராள்? இவ்வளவு அவசரமான, கடினமான வேலையைச் செய்ய இவளுக்கு என்ன தகுதி இருந்தது?

1. இவள் ஞானம் நிறைந்தவளாய் இருந்தாள். ஏனென்றால், ஜனங்கள் அருகிலிருந்தும், தூரத்திலிருந்தும் இவளிடத்திற்கு நியாயத்திற்காக வருவார்கள். ஒவ்வொரு தலைமுறையிலும் இப்பேர்ப்பட்ட ஆரோக்கியமான தீர்ப்பு வழங்கவும், நேர்மையான எண்ணமும், நேரான சிந்தனையுமுள்ள தெபொராக்கள் தேவை.

(2) இஸ்ர வேலின் அன்றைய சூழ்நிலையைப் பற்றி பகுத்துப் பார்த்து, அதைப் பற்றிய தெளிவான கருத்தைப் பெற்று, ஏதாவது, ஒன்று செய்யப்பட வேண்டும் என்று முடிவு செய்தாள். இருபது வருடம் பேரீச்ச மரத்தடியே உட்கார்ந்து நியாயம் விசாரித்த அவளால் தன்னுடைய அத்துணை பொறுப்புகளிடையேயும், தானாக வீட்டையும் பார்த்துக்கொண்டு, அதே சமயம் மக்களின் நிலை பற்றிய ஒரு அவசரமும் கொண்டவளாய் செயல்பட்டுள்ளாள்.

3. பரலோகத்தின் தேவன் பார்வோனைத் தோற்கடித்ததையும், தன் ஜனங்களை மன்னாவைக் கொண்டு போஷித்ததையும், எரிகோவின் மதில்களை விழத் தள்ளினது போன்ற செயல்களை நினைத்து அந்த தேவன் மீது விசுவாசம் வைத்திருந்தாள். ஆம், தேவன் மீது பாசம் வைத்திருந்தாள். அவருக்கிருந்த விசுவாசத்தினால் தைரியம் பிறந்தது.

4. தேவன் சொல்லியிருந்த திட்டத்தைப் பின்பற்றி செயல்படுத்துவதற்கு தெபொராளுக்கு தைரியம் இருந்தது. பராக்கை வரவழைத்து, நீ நப்தலி புத்திரரிலும், செபுலோன் புத்திரரிலும் பதினாயிரம் பேரைக் கூட்டிக் கொண்டு, தாபோர் மலைக்குப் போகக்கடவாய் என்றும், நான் யாபீனின் சேனாதிபதியாகிய சிசெராவையும், அவன் ரதங்களையும் அவன் சேனையையும், கீசோன் பள்ளத்தாக்கிலே உன்னிடத்திற்கு வர இழுத்து அவனை உன் கையில் ஒப்புக் கொடுப்பேன் என்றும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிடவில்லையா என்றாள் (நியா. 4:6;7) பாராக், நீ என்னோடே கூட வந்தால் போவேன். என்னோடே கூட வராவிட்டால் நான் போகமாட்டேன் என்றான். தெபொராளின் தைரியம், விசுவாசம், பலம் இவைகள் தனக்குத் தேவை என்று பாராக் உணர்ந்திருந்தான். உன்னோடே கூட நிச்சயமாய் வருவேன் என்றாள். தைரியம் என்பது ஒருவரிடமிருந்து பிறருக்கு தொற்றிக் கொள்வதாகையால் தெபொராளிடமிருந்து, பாராக்குக்கும், பிறகு பதினாயிரம் பேருக்கும் தைரியம் வந்தது. எதிரிகள் வெட்கப்படுமளவுக்கு தோற்றுப்போனார்கள். இஸ்ரவேலுக்கு மகிமையான வெற்றி கிட்டியது என்பதை நியா: 5ம் அதிகாரத்தில் தெபொராளின் அழகான பாடல் நமக்கு காட்டுகிறது.

ஜெயம் எப்படி கிடைத்தது? : தேவனோடு சேர்ந்து நாம் வேலை செய்யாவிட்டால் ஒரு போதும் வெற்றி இல்லை. முதலாவது தெபொராள் எழுந்தாள். இது ஏதோ அவளைப் பெருமையாய் எண்ணிப் பேசப்பட்ட ஒன்றல்ல. தேவனுக்கு மகிமை செலுத்தினாள். அதே சமயம் இப்பேர்ப்பட்ட சிலாக்கியம் தனக்குக் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்து களி கூறுகிறாள். தாழ்மை என்பது செயல்படாமல் சும்மா

இருப்பதல்ல. தேவனைச் சார்ந்து, உடனுள்ளவர்களையும் சேர்த்துக் கொண்டு செயல்படுவதாகும்.

ஜனங்கள், தெபொராள், பாராக் அனைவரும் சேர்ந்து தேவன் சொன்னபடி செய்தார்கள். தேவனிடம் பொறுப்பை விட்டு விட்டு சும்மா இராமல், எழுந்து செயல்பட்டார்கள், வெற்றி கிடைத்தது.

நன்மைக்கோ, தீமைக்கோ தனிநபர் எவ்வளவு முக்கியம் என்று பாருங்கள்? ஆயி பட்டணத்தில் இஸ்ரவேலின் தோல்விக்கு ஆகான் காரணமாயிருந்தான். மிரியாமின் பாவம் ஆயிரக்கணக்கானவர்களைத் தாக்கியது.

தன்னை முழுவதுமாக தேவனுக்கு அர்ப்பணித்த தெபொராள் நிமித்தம் ஒரு தனி நபர் தேவனுக்காக வல்லமையாய் எழுந்து செயல்பட முடியும் என்பது நமக்குத் தெரிகிறது. பின்பு தேசம் 40 வருடம் அமைதியாயிருந்தது என்று பார்க்கிறோம் (5:31)

இதை வாசிக்கும் அருமையான சகோதரிகளே! இப்புதிய வருடத்தில் தெபொராள் மூலம் நமக்குத் தைரியமும், விசுவாசமும் கிடைக்கும் என்று நம்புகிறேன். புதிய ஏற்பாட்டு உபதேசத்தின் கீழ் வாழும் நாம் இப்படி நியாயதிபதியாகவோ, தீர்க்கதரிசியாகவோ இருக்க வேதம் அனுமதி கொடுக்கவில்லை. ஆனால், பிறரோடு சேர்ந்து செயல்பட தெபொராளின் மனது நமக்குக் கிடைக்கும். விழி, விழி, தொபொராளே விழி, விழி (5:12).

இஸ்ரவேல் முற்றிலும் அழிந்து போகாமலிருக்க, தெபொராள் விழித்து எழ வேண்டிய தாய் இருந்தது. ஆம், மக்கள் ஆத்துமாவில் முற்றிலும் அழிந்து போகாமல் இருக்க நானும், நீங்களும் தேவைப்படுகிறோம். மனப்பூர்வமாய் நாம் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். எந்தக் காரியமாயிருந்தாலும் தீமைக்கு எதிர்த்து நின்றே ஆக வேண்டும். தேவனுக்கடுத்த சரியான காரியங்களாயிருந்தால் நம்மை அப்படியே அர்ப்பணம் செய்து என்னவானாலும் பரவாயில்லை என்று தேவனோடு சேர்ந்து நிற்க வேண்டும்.

மேலும், நம்மைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதின் அறிவும் வேண்டும். சத்துருவின் பலம் தெரிந்தால் தான் போராட முடியும். அத்தோடு தேவனுடைய வார்த்தைகளின் அறிவும் நமக்கு அவசியம். அப்போது தான் எதிராளியாகிய பிசாசை ஜெயிக்க முடியும்.

நமக்குத் தைரியம் வேண்டும். தேவனோடும், தேவனுடைய வார்த்தைகளோடும் சேர்ந்து வாழ்ந்தால் தான் தைரியம் கிடைக்கும். சோர்ந்து போன இருதயம் நமக்கு வேண்டாம். உண்மைக்காகவும், நீதிக்காகவும் விழித்தெழுந்து வேலை செய்ய இஸ்ரவேலின் தாயாகிய தெபொராளைப் போன்ற சிங்கத்தின் இருதயத்தைப் போன்று பலமான இருதயம் கொண்ட ஸ்திரீகள் தேவனுக்கு தேவை.

ஆக, அருமையானவர்களே, ஏதோ புதிய வருடங்கள் அதிர்ஷடமாக நமக்கு கிடைக்கிறதென்று எண்ணாமல் தேவனுக்காக, உண்மைக்காக, இயேசுவுக்காக, அவருடைய ஒரே சபைக்காக வேலை செய்ய விழித்தெழுவோம். தேவனோடு சேர்ந்து ஜெயம் பெறுவோம். !!

வாலிபர் பகுதி

# ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காண....

பென்னி மார்ட்டின்

வாலிபர்களாகிய உங்கள் யாவருக்கும் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் யாவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். பிரியமானவர்களே, நாம் வருடாவருடம் புத்தாண்டுத் தீர்மானங்களை எடுக்கிறோம், அந்தத் தீர்மானங்களை நாளைக்கு செயல் படுத்தலாம், நாளை மறுநாள் செயல்படுத்தலாம், அடுத்த வாரம், அடுத்த மாதம் என்று தள்ளிப் போட்டுக் கொண்டே போக அடுத்த புத்தாண்டும் பிறந்து விடுகிறது. நாமும் செயல்படுத்தப்படாத அதே பழைய தீர்மானங்களுடன் புதிய ஆண்டிற்குள் பிரவேசிக்கிறோம், இப்படியே பல ஆண்டுகள் உருண்டோடி விட்டன. ஆனால், இந்தப் புத்தாண்டில் நம்மால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் செயல்படுத்தப்பட தேவன் தாமே அருள் புரிவாராக!.

பொதுவாகவே, நாமெல்லாரும் தேவன் நமக்கு ஒவ்வொரு புதுவருடத்தைத் தரும்போதும் அடுத்த வருடத்தையும் நாம் காணும்படி அவர் நமக்கு ஜீவனைத் தரவேண்டும் என்று வாஞ்சிக்கிறோம், ஏங்குகிறோம். வேறுவிதமாகச் சொன்னால் நாம் இவ்வுலகில் அதிக ஆண்டுகள் வாழ ஆசைப்படுகிறோம். அப்படி ஜீவனை விரும்பி, நல்ல நாட்களை காணவேண்டுமென்றிருப்பதை வேதாகமம் தவறு என்றோ பாவம் என்றோ கூறுவதில்லை, மாறாக அதற்கென்று தேவனால் கட்டளையிடப் பட்டிருக்கிற காரியங்களைச் செய்ய வேண்டுமென்று தான் வலியுறுத்துகிறது. புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலனாகிய பேதுரு இது பற்றிச் சொல்லும் போது, *ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத்தன் நாவையும், கபடத்துக்குத்தன் உதடுகளையும் விலக்கிக்காத்து, பொல்லாப்பை விட்டு நீங்கி நன்மை செய்து, சமாதானத்தைத் தேடி, அதைப்பின் தொடரக்கடவன் என்று புத்திச் சொல்கிறார்* (1 பேதுரு 3:10,11).

பேதுருவால் மேற்கோள் காட்டப்பட்டிருக்கிற, இந்த சிந்தையை ஈர்க்கும் வாக்கியத்தை கவனித்துக் கூடுதலான தகவல்களுக்காக அதை ஆராய்ச்சி செய்யாமல் யார் தான் கடந்து போவார்? வேறுவிதமாகச் சொன்னால் அதிக நாட்கள் வாழ யார் தான் விரும்புவதில்லை? நல்ல நாட்களை யார் தான் விரும்புவதில்லை? இந்த பாழாய்ப் போன உலகில் பெரும்பாலும் நாம் பலவிதமான பாடுகள் படுகிறோம், பல்வேறுபட்ட நெருக்கடிகளைச் சந்திக்கிறோம், அவைகளின் வழியாய் கடந்து போகிறோம். பிரியமானவர்களே, இன்றைய நாட்களில் வாலிபர்கள், வயதானவர்கள் என்று எல்லோருமே ஆயுசு நாட்களை அதிகரிக்க என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்கிறார்கள். சமச்சீரான உணவு, உடற்பயிற்சி, தூக்கம் என்று எல்லாவற்றிலும் கவனம் செலுத்தினாலும் கவலை என்னும் அழையா விருந்தாளி அதிக ஆயுசு நாட்கள் என்கின்ற கனவைக் கலைத்து விடுகிறது. அப்படியென்றால் ஆயுசு நாட்களை அதிகப்படுத்துவதற்கு என்ன தான் வழி என்கிற மாபெரும் கேள்விக்கு தீர்வாய், அருமருந்தாய் அமைகிறது 1பேதுரு 3:10,11 வசனங்கள்.

## I ஜீவனை விரும்புதல்

இவ்வுலகில் பலர் ஜீவனை விரும்பாமல் இருப்பது துரதிஷ்ட வசமானது. வருடந்தோறும் லட்சக்கணக்கான மக்கள் தற்கொலையினால் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள். மற்றவர்கள் அந்த அளவுக்குப் போகாவிட்டாலும் கூட வாழ்க்கையை வெறுத்தவர்களாய், மகிழ்ச்சியற்றவர் களாய் இருக்கிறார்கள். இதில் வேதனைப்பட வேண்டிய, வெட்கப்பட வேண்டிய கரியம் என்னவென்றால் வாழ்க்கையே வெறுத்துவிட்டது என்று சொல்கிற கூட்டத்தில் தங்களைக் கிறஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற வர்களும் இருக்கிறார்கள். பிரியமான வாலிபக் கண்மணிகளே! இப்போது நாம் ஜீவனை விரும்ப எது காரணிகளாக அமைகின்றன அல்லது எது நம்மை ஊக்கப்படுத்துகின்றன என்று பார்ப்போம்?

முதலாவது, நாம் தேவ சாயலில் படைக்கப்பட்டிருக்கிறோம் (ஆதி. 1:27); அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம் (அப். 17:28). ஆகவே, ஜீவனை விரும்ப முடியும்.

இரண்டாவது, நம் கண்ணீரைத் துடைக்க, நம்மை விசாரிக்க (1 பேதுரு 5:7) நம் ஜெபங்களுக்கு பதில் கொடுக்க தேவன் இருப்பதால் நாம் ஜீவனை விரும்ப முடியும்.

**சமச்சீரான உணவு, உடற்பயிற்சி, தூக்கம் என்று எல்லா வற்றிலும் கவனம் செலுத்தினாலும் கவலை என்னும் அழையா விருந்தாளி அதிக ஆயுசு நாட்கள் என்கின்ற கனவைக் கலைத்து விடுகிறது.**

மூன்றாவது, நாம் மரணத்தைத் தழுவும்போது கூட ஜீவனை விரும்ப முடியும். ஏனென்றால், நம் சரீரம் ஒரு விதையைப் போல் மண்ணில் விதைக்கப்பட்டு (1தெச. 4:13) கண்ணீரில்லாத கவலையில்லாத தேசத்தில் (வெளி. 21:4) நம் ஜனத்தாரோடே சேர்க்கப்படும் அந்த நாளை எதிர்நோக்க முடியும் (ஆதி. 25:8).

எனவே, பிரியமான வாலிப உள்ளங்களே! நாம் ஏன் இந்தப் பூமியில் பிறந்தோம் என்று வாழ்க்கையே வெறுத்தவர்களாக நாம் பேசாமல் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற ஜீவனை எண்ணி, வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியையும் ரசித்து, ருசித்து கர்த்தருக்குள் வாழ கற்றுக் கொள்ள வேண்டும். தேவனுக்கு உடையவைகளாகிய நம் சரீரத்தினாலும், நம் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் (1 கொரி. 6:20) பூமிக்குரிய கூடார மாகிய நம் சரீரம் அழிந்துபோனாலும், பரலோகத்தில் நமக்கு நித்திய வீடு உண்டு என்பதை உணர்ந்தவர்களாய் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும் (1 கொரி. 5:1).

## II நல்ல நாட்களைக் காணுதல்

நல்ல நாட்கள் என்றால் என்ன? கெட்ட நாட்கள் என்றால் என்ன? பல வாலிபர்கள் வெளிப்புற சூழ்நிலைகளை அளவுகோலாக எடுத்துக் கொண்டு இது நல்லநாள், அது கெட்ட நாள் என்று தீர்மானித்துக் கொள் கிறார்கள். உதாரணமாக, அவர்கள் வாழ்க்கையில் எதையாவது சாதித்து விட்டாலோ, புதிய உயரங்களைத் தொட்டாலோ அல்லது செழிப்பான

காலங்கள் வந்தாலோ அவைகளை நல்ல நாட்களென்றும், பொருளாதார மந்த நிலையில் இருக்கும் போதோ, வியாதியால் அவதிப்படும்போதோ அந்த நாட்களைக் கெட்ட நாட்களென்றும் வெளிப்புறமான சூழ்நிலைகளை அடிப்படையாக வைத்தே நாட்களைக் கணக்கிடுகிறார்கள்.

ஆனால், நாம் வேதாகமத்தில் பார்க்கும்போது பவுலும், சீலாவும் அடிக்கப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டபோதும் நடுஇராத்திரியிலே அவர்கள் ஜெபம் பண்ணி, சந்தோஷமாய் தேவனை எப்படித் துதித்துப் பாடினார்கள் (அப். 16:25). எப்படி அவர்களால் அப்படிச் செய்ய முடிந்தது? பவுலுக்கும், சீலாவுக்கும் அது நல்ல நாளாகத்தான் இருந்திருக்கிறது. நமக்கு இப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருந்தால் வாழ்க்கையிலேயே மிகவும் மோசமான அல்லது கெட்ட நாள் என்று முத்திரை குத்தியிருப்போம். எனவே, மகிழ்ச்சியான நல்ல நாட்களைத் தீர்மானிப்பது வெளிப்புறமான சூழ்நிலைகள் அல்ல, நம் மனநிலைதான். தேவன் தரும் எல்லா நாட்களையும் நாம் நல்ல நாட்களாகவே எடுத்துக் கொண்டு அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். எந்த ஒரு

வாழ்க்கையில் எதையாவது சாதித்து விட்டாலோ, புதிய உயரங்களைத் தொட்டாலோ அல்லது செழிப்பான காலங்கள் வந்தாலோ அவைகளை நல்ல நாட்களென்றும், பொருளாதார மந்த நிலையில் இருக்கும் போதோ, வியாதியால் அவதிப்படும்போதோ அந்த நாட்களைக் கெட்ட நாட்களென்றும் வெளிப்புறமான சூழ்நிலைகளை அடிப்படையாக வைத்தே நாட்களைக் கணக்கிடுகிறார்கள்.

மனிதனும் நரகத்தில் ஒரு நாளைக் கழிக்கும் வரை உண்மையாகவே கெட்ட நாள் வாழ்க்கையில் எது என்பதை அறிந்து கொள்ளமாட்டான்.

## III தீர்வு

தேவதாசனாகிய பேதுரு ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றிருக்கிறவன் என்ன செய்ய வேண்டும் என்கிற கேள்விக்குப் பதிலாக அவைகளுக்குத் தீர்வாக (1 பேதுரு 3:10,11) வசனங்களில் விளக்கம் கொடுத்துள்ளார். முதலாவது, ஒரு மனிதன் பொல்லாப்புக்குத்தன் நாவை விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்கிறார். நாவு என்பது ஒரு சிறிய உறுப்பாக இருந்து கொண்டு எந்த ஒரு பெரிய மனிதனையும் கட்டுப்படுத்துகிறது (யாக். 3:5-8). அது அடங்காத பொல்லாங்குள்ளதும் தேவன் வெறுக்கிற ஏழு காரியங்களில் மூன்றைக் கொண்டதாகவும் இருக்கிறது. அதாவது, நாவு சம்மந்தமாக இருக்கிறது பொய் நாவு அபத்தம் பேசும் பொய்ச்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல் போன்றவைகளாகும் (நீதி. 6:17,19). இதுமட்டுமல்லாமல் பெருமை, முகஸ்துதி, வம்பளப்பு, தவறான தகவல், அவதூறு போன்ற காரியங்களிலும் நாவின் பங்களிப்பு அதிகமாயிருக்கிறது. பிரியமானவர் களே, இதுகாறும் நாம் நாவை அடக்குவதைப் பற்றிப் பார்த்தோம்.

அடுத்ததாக ஜீவனை விரும்பி நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்பை விட்டு நீங்கி, நன்மை செய்ய வேண்டும். பலர், அதிலும் குறிப்பாக நாங்களும் தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் கூட இந்த அடிப்படை உண்மையைப் புரிந்து

கொள்ள சிரமப்படுவது ஆச்சரியமாக இருக்கிறது. தேவன் தம்முடைய பிள்ளைகள் பொல்லாப்பை, தீமையை வெறுக்க வேண்டும் என்று எதிர் பார்க்கிறார் (நீதி. 8:13). அதேபோல் நாம் நன்மையானவைகளை சக மனிதர் களுக்குச் செய்யும் போது தேவனிடத்திலிருந்து நன்மையை எதிர்பார்க்க முடியும். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நன்மை செய்கிறவராய் இவ்வுலகில் சுற்றித்திரிந்தார், அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும் நாமும் நன்மையையே செய்ய வேண்டும். கடைசியாக, பேதுரு ஆசிரியர் ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றிருக்கிறவன் சமாதானத்தைத் தேடி, அதைப்பின் தொடரக்கடவன் என்று சொல்கிறார். இன்றைய நாட்களில் பலர் சண்டை பண்ணுகிறவர்களாக, அதையே பொழுதுபோக்காகக் கொண்டிருப்பவர்களாக இருப்பதை நாம் பார்க்கிறோம். அவர்களிடம் சமாதானம் என்பது ஒரு பேச்சுக்குக் கூட இருக்காது. ஆனால், நாம் சமாதானத்தைத் தேடி அதைப் பின் தொடர வேண்டுமென்று தேவனால் கட்டளையிடப்பட்டிருக்கிறோம். இந்த காரியத்தில் நாம் உலகத்தாருக்கு வழிகாட்ட வேண்டும், முன்னுதாரணமாகத் திகழ வேண்டும். ஏனென்றால், சமாதானம் பண்ணுகிற நாம் தான் பாக்கியவான் களாக, தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் (மத். 5:9).

பிரியமான வாலிபக் கண்மணிகளே! நம்மெல்லோருக்கும் இவ்வுலகில் அதிக நாட்கள் வாழவேண்டுமென்றும், வாழும்போது நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றும் தணியாத அவா இருக்கும். அவை களை நமதுடையதாக்கிக் கொள்ள எத்தனையோ சரீர முயற்சிகளை நாம் எடுக்கிறோம். சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது என்று தேவன் சொல்கிறபடியால் (1 தீமோத். 4:8) சரீர முயற்சியை விட்டு விட்டு பொல்லாப்புக்கு நம் நாவையும், கபடத்துக்கு நம் உதடுகளையும் விலக்கிக்காத்து, பொல்லப்பை விட்டு நீங்கி, நன்மை செய்து, சமாதானத்தைத் தேடி, அதைப்பின் தொடரும் போது தேவன் நம் ஆயுசு நாட்களை பெருகச் செய்வார், இவ்வுலகிலும் நல்ல நாட்களை காணச் செய்வார், வரும் உலகத்திலும் நல்ல நாட்களை காணும் படி செய்வார். இத்தகைய ஆசீர்வாதங்களை அள்ளிக் கொள்ள இந்த புத்தாண்டில் தீர்மானம் எடுப்பதற்கு ஆயத்தமா?

## நற்செய்தியின் தாக்கம்

1. பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து நம்மை மீட்கிறது (ரோம 6:17)
2. பாவக் கறைகளிலிருந்து நம்மை மீட்கிறது (1 யோவான் 1:7)
3. பாவப் பழக்க வழக்கங்களிலிருந்து நம்மை விடுதலை ஆக்குகிறது (1 கொரி. 6:9,11)
4. பாவத்தின் விளைவாகிய ஆவிக்குரிய மரணத்திலிருந்து விடுவிக்கிறது (ரோமர் 6:23)
5. பாவத்தின் பிரசன்னத்திலிருந்து நம்மை விடுவிக்கிறது (கலா. 1:4)

# சிறுவர் பகுதி

# என்றும் அழியாத ராஜ்ஜியம்

**ABEL R. NAYAGAM**

சிறுபிள்ளைகளாகிய உங்களை மீண்டும் சிறுவர் பகுதியின் மூலமாக சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் தொடர்ந்து இந்தப் பகுதியைப் படித்து பயனடைந்து வருவீர்கள் என நம்புகிறேன். இந்த மாதம் நான் உங்களோடு கூட சேர்ந்து கிறிஸ்துவுக்குள்ளாக, இச்சிறு வயதில் எப்படி இருக்க வேண்டும் என அலசிப் பார்க்கப் போகிறோம்.

"போர்" "சண்டை" என்று சொன்னாலே நமக்கு விறு விறுப்பும், ஆர்வமும் வந்து சேரும். அப்படித்தானே? நம்முடைய வேதத்தில் அநேக போர்களைப் பற்றி நாம் வாசித்திருப்போம். கேட்டுமிருப்போம். அப்படிப்பட்ட போர்களை வாசிக்கும் போது நாம் மகிழ்ச்சியடைகிறோம். அப்படித் தானே! அப்படி போர்கள் நடந்த நாட்கள் தான் வேதாகமத்தில் விறு விறுப்பான காலம் என்று கூட நாம் சொல்லலாம். எப்பொழுதும் ஒரு போர் இருந்து கொண்டே தான் இருக்கிறது. பாருங்களேன்! ... சவுல் ராஜா அமலேக்கியரோடே போர் செய்தான். மேலும், தாவீது பெலிஸ்தரோடும், சாலமோன் ராஜா தன் நாட்டின் எல்லையைக் காக்கும்படியாக போர் செய்தார்கள். இப்படிப் பல போர்களை நாம் வேதத்தில் காண்கிறோம். அப்படிப் பட்ட காலங்களை நாம் நினைப்ப தற்கே பயங்கரமாயிருக்கிறது. அப்படித்தானே!

நாம் யாரும் போர் நடக்கும் இடங்களில் வாழ்ந் ததில்லை. அந்த காலம் முடிந்தது. நாம் அப்படி நினைப்பது சரியா? இல்லை. நாம் ஒரு ராஜ்ஜியத்தில் வாழ்ந்து வருகி றோம். அதிலே நாம் தினமும் போர் செய்து கொண்டிருக்கிறோம். இதை அறிவீர்களா? அறிந்து கொள் ளுங்கள்.

தீர்க்கதரிசிகளின் காலத்தில், தீர்க்தரிசிகள் ஒரு சிலர் ராஜ்ஜி யத்தை குறித்து முன்னுரைத்தனர். அவர்கள் அந்த ராஜ்ஜியத்தை பற்றி என்ன கூறியிருக்கிறார்கள் தெரியு மா? அது இந்த பூமியிலுள்ள எல்லா ராஜ்ஜியங்களைக் காட்டிலும் பெரியதும், வல்லமையுமான ஒரு ராஜ்ஜியம் என்றும், அது மற்ற ராஜ்ஜியங்களைப் போல் இல்லாத படி, ஒரு ஆவிக்குரிய ராஜ்ஜியமாய் விளங்கும் என்றும் முன்னுரைத் தார்கள். சரி, அந்த தீர்க்கதரிசிகள் சொன்னதெல்லாம் நிறைவேறி யதா? ஆம் அவை நிறைவேறின.

இயேசு பூமியில் இருந்த போது வரப்போகிற அந்த இராஜ்ஜி யத்தைப் பற்றி அடிக்கடி பேசினார். அது வல்லமையோடே வரும் என்று தம் சீஷர்களுக்குக் கூறினார். (மாற் 9:11) அந்த வல்லமை பரிசுத்த ஆவி யோடே வரும் (அப். 1:8) என்றும் கூறினார். நாம் அப்போஸ்தலரிலே படிக்கிறபடி அது பெந்தெகொஸ்தே நாளிலே வந்தது (அப். 2).

ஆக, இயேசுவாலும், தீர்க்க தரிசிகளாலும் கூறப்பட்ட ராஜ்ஜியம் அந்த நாளிலே ஸ்தாபிக்கப் பட்டது. அந்த ஆவிக்குரிய ராஜ்ஜியம் இன்னும் இருக்கிறது. அது நாம் இப்பொழுது கூறுகின்ற சபையே

ஆகும். (தானி 2:44)ல் சொன்னபடி அது அழியாத ஒரு ராஜ்ஜியம் ஆகும்.

சரி, இப்பொழுது நாம் பாடத்திற்கு வருவோம். நான் உங்க ளுக்கு முன்னே சொன்னேன் அல்லவா? நாம் போர் செய்கிறோ மென்று, அதை நினைத்து கொள் ளுங்கள். இப்பொழுது பூமியில் இரண்டு ராஜ்ஜியங்கள் இருக் கின்றன. ஒன்று உண்மையையும், நல்லதையும் செய்யும் தேவனுடைய ராஜ்ஜியம். மற்றொன்று இருளை யும், பொல்லாப்பையும் விரும்பும் பிசாசின் ராஜ்ஜியம். ஒளிக்கும், இருளுக்கும் உள்ள உறவை போல் முற்றிலும் அந்த ராஜ்ஜியங்கள் ஒன்றுக்கொன்று வேறானவை. அவை இரண்டும் எப்போதும் போர் செய்து கொண்டே இருக்கின்றன. நீங்கள் உங்கள் நண்பர்களுக்கோ பிறருக்கோ இயேசுவைப் பற்றி கூறும் போது சாத்தானுக்குரிய இருளின் இராஜ்ஜியத்திற்கு எதிராய் போர் செய்கிறீர்கள். நாம் தேவனு டைய இராஜ்ஜியத்தின் படையிலே போர் வீரர்களாக இருக்கிறோம். எனவே, நீங்கள் தேவனுடைய சேனையில் வீரராய் இருக்கிறோ மென்பதை மறந்து விடாதீர்கள். நீங்கள் இருளின் அதிகாரத்தை முறியடிக்கும்படி தேவன் உங்களை தேடுகிறார்.

நீங்கள் கடுமையாக உழைத்து அவருடைய சேனையில் நீங்கள் ஒரு வெற்றி வீரராக இருக்க வேண்டுமென்றே எதிர்பார்க்கிறார். நீங்கள் கடுமையாக உழைத்து அவருடைய சேனையில் நீங்கள் ஒரு வெற்றி வீரராக இருக்க வேண்டுமென்றே எதிர்பார்க்கிறார்.

சரி, எப்படி இதை செய்ய முடியும்! ஒன்று தெரிந்து கொள் ளுங்கள். இந்த சிறுவயதிலேயே தேவனுடைய சேவகராயிருக்கிற உங்களுக்கு அவர் எண்ணற்ற ஆசீர்வாதம் பொழிவார்.

நீங்கள் உங்கள் உறவினர் களோடும், குறிப்பாகப் பள்ளிகளில் நண்பர்களோடும் இயேசுவைப் பற்றி கூறுங்கள். உங்கள் நல் நடத்தையின் மூலம் உங்கள் நண்பர்களை இயேசுவின் பக்கம் திருப்புங்கள். தேவனுக்குப் பிரிய மானதை செய்யுங்கள். இதைத் தானே தேவன் உங்களிடம் எதிர் பார்க்கிறார்.

இந்தப் புத்தாண்டில் நல்ல மாணவர்களாகவும், தேவனுக்கு ஏற்ற போர் வீரர்களாகவும் இருப்பீர் களானால் அவர் உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பார். ஏனென்றால், அவர் தான் சொல்லி யிருக்கிறாரே " சிறு பிள்ளைகள் என்னிடம் வர தடை பண்ணாதீர்கள் என்று "!

கர்த்தருக்குச் சித்தமானால், உங்களை அடுத்த மாதம் சந்திக் கிறேன்! தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

## இதுவா தீர்மானம்?!

**ஒவ்வொரு நாளிலும் ஜெபிப்பதற்கு நேரம் ஒதுக்கவும், வேதம் வாசிக்கவும், நண்பர்களுக்கு உதவவும் தீர்மானித்தேன். ஆனால், வாரம் முடியும் போது, நான் ஏற்கனவே தீர்மானித்த காரியங்களைச் செய்ய மீண்டும் முடிவெடுக்க வேண்டு மென்பதைக் கண்டு கொண்டேன்.**

# நிழலும், நிஜமும்

*(The Shadow and the Reality)*

**Bro. ஜே.ஆ. ஜேம்ஸ் ராஜகுமார்**

அன்பானவர்களே!

சென்ற மாதத்தில் சத்தியம் செய்கிறதைக் குறித்தும், தீமையோடு எதிர்த்து நிற்காமல் சத்ருவை நேசிக்க வேண்டும் என்று கவனித்த பிறகு, ஓய்வு நாளைக் குறித்து ஆரம்பித்தோம். சிலர் நினைக்கலாம் இத என்ன பெரிய விஷயம், ஞாயிற்றுக்கிழமை வாரத்தின் முதல் நாளாகவாவது அல்லது ஓய்வு நாளாகவாவது இருந்து விட்டுப் போகட்டுமே நாம் ஆண்டவரை விசுவாசித்தால் பரலோகம் போகலாமே, இதை விவாதித்து என்ன செய்யப்போகிறோம் என்று எண்ணுகிறார்கள் அல்லது அலட்சியப் படுத்துகிறார்கள். இவர்களிடத்தில் ஒன்றைக் கேட்க வேண்டும். ஆதாம், ஏவாள் எத்தனை பொய்யை நம்பினதற்காக ஏதேன் தோட்டத்தையும், தேவனோடு வாழ்ந்த வாழ்க்கையையும் விட்டுவிட்டார்கள். ஒரு பொய்யை நம்பினதற்காக, அல்லது ஒரு கட்டளையை மீறினதற்காக. ஆகையால், நாம் ஏன் தேவன் ஏற்படுத்தின நாளை மாற்றவேண்டும்? அல்லது மாற்றிக் கூற வேண்டும் அப்படிச் செய்யக்கூடாது.

விசேஷமாக ஞாயிற்றுக்கிழமையை தேவன் நியமித்த ஓய்வு நாளாக அதுவும் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்கள் இந்த நாளை ஓய்வு நாளாக எண்ண வேண்டும் என்கிற என்னுடைய அன்பிற்குரிய நண்பர்களுக்காக எழுது கிறேன். ஞாயிற்றுக்கிழமையை வேதத்தின்படி ஓய்வு நாள் என்று உறுதி செய்வதற்காகப் பாடல்களையும் எழுதி மக்களை பாட வைத்து அதை நம்ப வைக்கிறார்கள். பாடல் : "ஓய்வு நாள் இது மனமே தேவன்", புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களுக்கு கொடுத்த ஓய்வு நாளாக போதித்து, நாம் அந்த நாளை இஸ்ரவேலர்கள் போல கை கொள்ள வேண்டும் என்று போதித்து, தவறான கருத்தை உபதேசமாக கொண்டு வருவது மட்டு மல்லாமல். ஞாயிற்றுக்கிழமையை வாரத்தின் முதல் நாள் என்று சொல்பவர் களை ஆவியில்லாதவர்கள் என்று கேலி செய்தும் வருகிறார்கள்.

இயேசுவானவர் உயிர்த்தெழுந்தது வாரத்தின் முதல் நாள் தான் என்று சென்ற மாதத்திலேயே நாம் மத். 28:1; மாற்கு 16:9 ஆகிய வசனங்கள் மூலமாக உறுதிபடுத்தினோம். பழைய ஏற்பாட்டின் காலத்தில் ஓய்வு நாள் என்பது வாரத்தின் கடைசி நாளாக இருந்தது, (ஆதி. 1:31-2:2). ஆறு நாட்களும் தேவன் சிருஷ்டிப்பின் கிரியையை நிறைவேற்றி, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். அப்பொழுதே ஏழு நாட்கள் ஒரு பகுதியாக அல்லது வாரமாக தொடர்ந்தது.

ஆனால், இந்த ஓய்வு நாளை முற்பிதாக்கள் கை கொண்டார்களா என்பது நமக்குத் தெரியவில்லை. தேவன் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு அழைத்து வந்த நாளில், இந்த நாளை கர்த்தருக்குரிய பரிசுத்த ஓய்வு நாளாக அறிவித்து அந்த நாளில் ஓய்ந் திருக்கும்படியாகவும், மன்னா அந்த நாளில் பெய்யாது எனவும் அதை சேகரிக்க யாரும் போக வேண்டாம் எனவும் மோசேயின் மூலமாக கட்டளை கொடுத்தார். இயேசு கிறிஸ்து பிறந்த நாட்கள் வரைக்கும் அது அப்படியே இஸ்ரவேல் மக்களால் கடைபிடிக்கப்பட்டு வந்தது.

எப்படியெனில் தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு புளிப்பில்லா அப்பப் பண்டிகை, வாரங்களின் பண்டிகை (பெந்தெகொஸ்தே பண்டிகை), கூடாரப் பண்டிகை ஆகிய மூன்று பண்டிகைகளை கொடுத்த போது (உபா. 16:16) ஓய்வு நாட்களை எண்ண வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பஸ்கா பண்டிகை முழுவதும் கொண்டாடி முடித்த பின்பு வரக்கூடிய ஓய்வு நாளுக்கு (இது பெரிய ஓய்வு நாள்) மறுநாள் (வாரத்தின் முதல் நாள்) தொடங்கி, எண்ணத் துவங்க வேண்டும். இப்படி ஏழு வாரங்கள் எண்ணினால் 7 X 7 = 49 நாட்கள் வரும். மறுநாள் 50வது நாள் பெந்தெகொஸ்தே நாள். ஏழாவது ஓய்வு நாளுக்கு பிறகு வருவதால் எப்போதும் பெந்தெகொஸ்தே நாள் வாரத்தின் முதல் நாள் தான் வரும் (லேவி. 23:5,6, 15,16; யோவான் 19:31).

இந்த காரணத்திற்காக யோவான் 19:31ல் இயேசுவானவர் சிலுவையில் அறையப்பட்ட நாள் பெரிய ஓய்வு நாளுக்கு முன்தினமாக அதாவது, ஆயத்த நாளாக இருந்தது என்று வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. (யோவா 19:42) ஓய்வு நாளில் இஸ்ரவேலர்கள் சாப்பாடு ஆயத்தம் செய்வது, துணி துவைப்பது, வேறு வேலைகள் செய்வது, தூரமான பிரயாணம் போவது போன்றவைகளைச் செய்யக்கூடாது என்பதற்காக ஓய்வு நாளுக்கு முன்தினமே அவர்கள் எல்லாவற்றையும் ஆயத்தம் செய்வதால் அந்த நாளுக்கு ஆயத்த நாள் என்று பெயர் வழங்கிற்று. ஆயத்த நாள் என்பது வாரத்தின் ஆறாம் நாள். அன்றைய முன்தினம் அதாவது 5ம் நாள் மாலையில் கிறிஸ்துவானவர் சீஷர்களுக்கு தம் சரீரம், இரத்தம் இவை களுக்கு அடையாளமாக அப்பம் திராட்ச ரசத்தை ஏற்படுத்தினார். அந்த நாள் இன்றைய கிழமைகளின்படி பார்த்தால் வியாழக்கிழமை என்று சொல்லலாம். இயேசுவை சிலுவையில் அறைந்த நாள் வெள்ளிக்கிழமை என்பது பிரபலமாயிருக்கிறது. அது ஆயத்த நாள். மறுநாள், சனிக்கிழமை ஓய்வு நாளாக இருந்திருக்க வேண்டும். ஓய்வு நாளுக்கு மறுநாள் வாரத்தின் முதலாம் நாள். இது அவர் மரித்த நாளுக்கு மூன்றாம் நாள். அந்த நாளில் அவர் உயிரோடு எழுந்தார். ஞாயிற்றுக்கிழமையை நாம் ஓய்வு நாள் என்று சொன்னால் வேதத்தின்படி ஓய்வு நாளுக்கு மறுநாள் திங்கட்கிழமை இயேசுவானவர் உயிர்த்தெழுந்ததாக வருமே அப்படியானால் வெள்ளி, சனி, ஞாயிறு, திங்கள் என நான்காம் நாளிலா கிறிஸ்துவானவர் உயிர்த் தெழுந்தார். அவர் மூன்றாம் நாளில் அதாவது இன்றைய ஞாயிற்றுக்கிழமை உயிர்த்தெழுந்தார். பெந்தெகொஸ்தே நாளும் வாரத்தின் முதல் நாளில் வருவதால் அப்போஸ்தலர் நடபடிகள் 2ம் அதிகாரத்தில் ஏறக்குறைய

3000 பேர் இரட்சிக்கப்பட்டதும் வாரத்தின் முதலாம் நாள். அவர்கள் சபையாக அப்போஸ்தலர் உபதேசம் போதித்து, அப்பம் பிட்டு ஐக்கியமாக இருந்ததும் வாரத்தின் முதலாம் நாள் (அப். 2:1, 41,42; 20:7) சபையார் காணிக்கை சேகரிக்க வேண்டும் என்று சொன்னதும் வாரத்தின் முதலாம் நாள். (1 கொரி. 16:1,2) இப்படி ஓய்வு நாளில் இஸ்ரவேலர்கள் ஓய்ந்திருந்து தேவனை மகிமைப்படுத்தினதற்குப் பதிலாக, வாரத்தின் முதல் நாளை சபை கூடும் நாளாக இயேசுவானவர் தம் அப்போஸ்தலர்கள் மூலம் ஏற்படுத்தினார்.

| நிழல் (பழைய ஏற்பாடு | நிஜம் (புதிய ஏற்பாடு) |
|---|---|
| ஓய்வு நாள், இன்றைய நாட்களின்படி சனிக்கிழமை | வாரத்தின் முதல் நாள் ஆராதனை இன்றைய நாட்களின்படி ஞாயிற்றுக்கிழமை |

இதன் காரணமாகத்தான் 7 ஆம் நாள் (Seventhday Adventist) திருச்சபையார்கள் சனிக்கிழமைகளிலே ஆராதனை செய்கிறார்கள். அவர்கள் புதிய ஏற்பாட்டை விரும்பாமல் அல்லது அதைப் பற்றியும் அதின் மகத்துவம் பற்றியும் தெரியாமல், இன்னும் பழைய ஏற்பாட்டு மக்களாயிருக்க விரும்புகிறார்கள். ஒன்று நான் திட்டமாக சொல்ல விரும்புகிறேன். பழைய உடன்படிக்கையை கை கொள்ளுகிறவர்கள் கிறிஸ்தவர்களாயிருக்க முடியாது.

அப்போஸ்தலர் நடபடிகள் 12:3,4 வசனங்களில் வரக்கூடிய புளிப்பில்லா அப்பப்பண்டிகை, பஸ்கா பண்டிகை என்கிற வார்த்தை King James Verson என்கிற ஆங்கில மொழி பெயர்ப்பிலே Easter என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த Easter என்ற சொல்லை கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த நாளுக்காக பயன்படுத்தி, அதை ஒரு பண்டிகையாக்கி, வருடத்தில் அதற்காக ஒரு நாளைக் குறித்து அந்தப் பண்டிகையை கொண்டாடாதவர்கள் கிறிஸ்தவர்களே கிடையாது என்று குற்றம் சாட்டுகிறவர்களுக்காக எழுதுகிறேன். பஸ்கா பண்டிகை கொண்டாடப்பட்ட நாளும் இயேசுவானவர் உயிர்த்தெழுந்த நாளும் ஒரே நாளா? Easter என்பது கிரேக்க மொழியின்படி பஸ்கா பண்டிகையைக் குறிக்கும் நாள். அதன்படி இயேசுவானவரும் பஸ்காவைப் புசித்தார் (லூக். 22:1,7,8-20). அன்று இரவு அவர் காட்டிக் கொடுக்கப்பட்டார். மறுநாள் ஆயத்த நாள். அதுவும் பெரிய ஓய்வு நாளுக்கு முன்தினமான ஆயத்த நாள், (யோவான் 19:31), மறுநாள் ஓய்வு நாள், அதுவும் அது பெரிய ஓய்வு நாள். இதன் அர்த்தம் என்னவென்றால் பஸ்கா பண்டிகை முடிந்து விட்டது என்று அர்த்தம். ஓய்வு நாளுக்கு மறுநாள் பெந்தெகொஸ்தே பண்டிகைக்காக எண்ணிக்கை ஆரம்பிக்கும் நாள். ஆக பெரிய ஓய்வு நாளுக்கு மறுநாள் எப்போதுமே புளிப்பில்லாத அப்பப்பண்டிகை வராது. அதாவது ஈஸ்டர் வராது. ஆகையால், இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த நாளை ஈஸ்டர் டே என்று சொல்வது மொட்டைத்தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சு போட முடியும் என்று சொல்வதைப் போல இருக்கிறது. கிறிஸ்துவின்

ஆனால், இந்த ஓய்வு நாளை முற்பிதாக்கள் கை கொண்டார்களா என்பது நமக்குத் தெரியவில்லை. தேவன் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு அழைத்து வந்த நாளில், இந்த நாளை கர்த்தருக்குரிய பரிசுத்த ஓய்வு நாளாக அறிவித்து அந்த நாளில் ஓய்ந் திருக்கும்படியாகவும், மன்னா அந்த நாளில் பெய்யாது எனவும் அதை சேகரிக்க யாரும் போக வேண்டாம் எனவும் மோசேயின் மூலமாக கட்டளை கொடுத்தார். இயேசு கிறிஸ்து பிறந்த நாட்கள் வரைக்கும் அது அப்படியே இஸ்ரவேல் மக்களால் கடைபிடிக்கப்பட்டு வந்தது.

எப்படியெனில் தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு புளிப்பில்லா அப்பப் பண்டிகை, வாரங்களின் பண்டிகை (பெந்தெகொஸ்தே பண்டிகை), கூடாரப் பண்டிகை ஆகிய மூன்று பண்டிகைகளை கொடுத்த போது (உபா. 16:16) ஓய்வு நாட்களை எண்ண வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பஸ்கா பண்டிகை முழுவதும் கொண்டாடி முடித்த பின்பு வரக்கூடிய ஓய்வு நாளுக்கு (இது பெரிய ஓய்வு நாள்) மறுநாள் (வாரத்தின் முதல் நாள்) தொடங்கி, எண்ணத் துவங்க வேண்டும். இப்படி ஏழு வாரங்கள் எண்ணினால் 7 X 7 = 49 நாட்கள் வரும். மறுநாள் 50வது நாள் பெந்தெகொஸ்தே நாள். ஏழாவது ஓய்வு நாளுக்கு பிறகு வருவதால் எப்போதும் பெந்தெகொஸ்தே நாள் வாரத்தின் முதல் நாள் தான் வரும் (லேவி. 23:5,6, 15,16; யோவான் 19:31).

இந்த காரணத்திற்காக யோவான் 19:31ல் இயேசுவானவர் சிலுவையில் அறையப்பட்ட நாள் பெரிய ஓய்வு நாளுக்கு முன்தினமாக அதாவது, ஆயத்த நாளாக இருந்தது என்று வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. (யோவா 19:42) ஓய்வு நாளில் இஸ்ரவேலர்கள் சாப்பாடு ஆயத்தம் செய்வது, துணி துவைப்பது, வேறு வேலைகள் செய்வது, தூரமான பிரயாணம் போவது போன்றவைகளைச் செய்யக்கூடாது என்பதற்காக ஓய்வு நாளுக்கு முன்தினமே அவர்கள் எல்லாவற்றையும் ஆயத்தம் செய்வதால் அந்த நாளுக்கு ஆயத்த நாள் என்று பெயர் வழங்கிற்று. ஆயத்த நாள் என்பது வாரத்தின் ஆறாம் நாள். அன்றைய முன்தினம் அதாவது 5ம் நாள் மாலையில் கிறிஸ்துவானவர் சீஷர்களுக்கு தம் சரீரம், இரத்தம் இவை களுக்கு அடையாளமாக அப்பம் திராட்ச ரசத்தை ஏற்படுத்தினார். அந்த நாள் இன்றைய கிழமைகளின்படி பார்த்தால் வியாழக்கிழமை என்று சொல்லலாம். இயேசுவை சிலுவையில் அறைந்த நாள் வெள்ளிக்கிழமை என்பது பிரபலமாயிருக்கிறது. அது ஆயத்த நாள். மறுநாள், சனிக்கிழமை ஓய்வு நாளாக இருந்திருக்க வேண்டும். ஓய்வு நாளுக்கு மறுநாள் வாரத்தின் முதலாம் நாள். இது அவர் மரித்த நாளுக்கு மூன்றாம் நாள். அந்த நாளில் அவர் உயிரோடு எழுந்தார். ஞாயிற்றுக்கிழமையை நாம் ஓய்வு நாள் என்று சொன்னால் வேதத்தின்படி ஓய்வு நாளுக்கு மறுநாள் திங்கட்கிழமை இயேசுவானவர் உயிர்த்தெழுந்ததாக வருமே அப்படியானால் வெள்ளி, சனி, ஞாயிறு, திங்கள் என நான்காம் நாளிலா கிறிஸ்துவானவர் உயிர்த் தெழுந்தார். அவர் மூன்றாம் நாளில் அதாவது இன்றைய ஞாயிற்றுக்கிழமை உயிர்த்தெழுந்தார். பெந்தெகொஸ்தே நாளும் வாரத்தின் முதல் நாளில் வருவதால் அப்போஸ்தலர் நடபடிகள் 2ம் அதிகாரத்தில் ஏறக்குறைய

3000 பேர் இரட்சிக்கப்பட்டதும் வாரத்தின் முதலாம் நாள். அவர்கள் சபையாக அப்போஸ்தலர் உபதேசம் போதித்து, அப்பம் பிட்டு ஐக்கியமாக இருந்ததும் வாரத்தின் முதலாம் நாள் (அப். 2:1, 41,42; 20:7) சபையார் காணிக்கை சேகரிக்க வேண்டும் என்று சொன்னதும் வாரத்தின் முதலாம் நாள். (1 கொரி. 16:1,2) இப்படி ஓய்வு நாளில் இஸ்ரவேலர்கள் ஓய்ந்திருந்து தேவனை மகிமைப்படுத்தினதற்குப் பதிலாக, வாரத்தின் முதல் நாளை சபை கூடும் நாளாக இயேசுவானவர் தம் அப்போஸ்தலர்கள் மூலம் ஏற்படுத்தினார்.

| நிழல் (பழைய ஏற்பாடு | நிஜம் (புதிய ஏற்பாடு) |
|---|---|
| ஓய்வு நாள், இன்றைய நாட்களின்படி சனிக்கிழமை | வாரத்தின் முதல் நாள் ஆராதனை இன்றைய நாட்களின்படி ஞாயிற்றுக்கிழமை |

இதன் காரணமாகத்தான் 7 ஆம் நாள் (Seventhday Adventist) திருச்சபையார்கள் சனிக்கிழமைகளிலே ஆராதனை செய்கிறார்கள். அவர்கள் புதிய ஏற்பாட்டை விரும்பாமல் அல்லது அதைப் பற்றியும் அதின் மகத்துவம் பற்றியும் தெரியாமல், இன்னும் பழைய ஏற்பாட்டு மக்களாயிருக்க விரும்பு கிறார்கள். ஒன்று நான் திட்டமாக சொல்ல விரும்புகிறேன். பழைய உடன் படிக்கையை கை கொள்ளுகிறவர்கள் கிறிஸ்தவர்களாயிருக்க முடியாது.

அப்போஸ்தலர் நடபடிகள் 12:3,4 வசனங்களில் வரக்கூடிய புளிப்பில்லா அப்பப்பண்டிகை, பஸ்கா பண்டிகை என்கிற வார்த்தை King James Verson என்கிற ஆங்கில மொழி பெயர்ப்பிலே Easter என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த Easter என்ற சொல்லை கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த நாளுக்காக பயன்படுத்தி, அதை ஒரு பண்டிகையாக்கி, வருடத்தில் அதற்காக ஒரு நாளைக் குறித்து அந்தப் பண்டிகையை கொண்டாடாதவர்கள் கிறிஸ்தவர்களே கிடையாது என்று குற்றம் சாட்டுகிறவர்களுக்காக எழுதுகிறேன். பஸ்கா பண்டிகை கொண்டாடப்பட்ட நாளும் இயேசுவானவர் உயிர்த்தெழுந்த நாளும் ஒரே நாளா? Easter என்பது கிரேக்க மொழியின்படி பஸ்கா பண்டிகையைக் குறிக்கும் நாள். அதன்படி இயேசுவானவரும் பஸ்காவைப் புசித்தார் (லூக். 22:1,7,8-20). அன்று இரவு அவர் காட்டிக் கொடுக்கப்பட்டார். மறுநாள் ஆயத்த நாள். அதுவும் பெரிய ஓய்வு நாளுக்கு முன்தினமான ஆயத்த நாள், (யோவான் 19:31), மறுநாள் ஓய்வு நாள், அதுவும் அது பெரிய ஓய்வு நாள். இதன் அர்த்தம் என்னவென்றால் பஸ்கா பண்டிகை முடிந்து விட்டது என்று அர்த்தம். ஓய்வு நாளுக்கு மறுநாள் பெந்தெகொஸ்தே பண்டிகைக்காக எண்ணிக்கை ஆரம்பிக்கும் நாள். ஆக பெரிய ஓய்வு நாளுக்கு மறுநாள் எப்போதுமே புளிப்பில்லாத அப்பப்பண்டிகை வராது. அதாவது ஈஸ்டர் வராது. ஆகையால், இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த நாளை ஈஸ்டர் டே என்று சொல்வது மொட்டைத்தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சு போட முடியும் என்று சொல்வதைப் போல இருக்கிறது. கிறிஸ்துவின்

உயிர்த்தெழுந்த நாளை ஈஸ்டர் சன்டே என்று தேவனை விட ஞானமுள்ள மனிதன் உண்டாக்கின நாள். மனிதன் உண்டாக்கின நாளை பிடிவாதமாக பிடித்துக் கொண்டு கொண்டாடுகிற இக்காலத்து ஞானிகள், தேவனை விட அல்லது கிறிஸ்துவை விட தங்களை ஞானிகளாக காட்டிக் கொண்டு வேதத்தை தள்ளி விட்டு மனிதனுடைய கூற்றுகளில் தங்களை திணித்துக் கொண்டு வேதத்தைத் தள்ளி விட்டு மனிதனுடைய கூற்றுகளில் தங்களை திணித்துக் கொண்டு தங்களை கிறிஸ்தவர்கள் ஆவிக்குரியவர்கள் என்று சொல்வது ஆச்சரியமாயிருக்கிறது.

அடுத்த மாதங்களில் இன்னும் பல ஆச்சரியங்களைக் காண்போம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக, இயேசு கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையை, புதிய ஏற்பாட்டை, கிறிஸ்துவின் உபதேசத்தை மாத்திரம் கை கொள்ள நம்மை நாம் ஆயத்தப்படுத்துவோம். நாம் நரகம் செல்வதற்கு ஒரு கள்ள உபதேசத்தை விசுவாசிப்பது அல்லது மனித கற்பனைகளைக் கைகொள்வது அல்லது மனித பாரம்பரியங்களைக் கை கொள்வது போதும். இந்த விஷயத்தில் நாம் எச்சரிக்கையாயிருப்போம். தேவன் தாமே மீண்டும் மீண்டும் இந்த புதிய வருடத்தில் நம்மை ஆசீவதிப்பாராக!

## கிறிஸ்துவுக்குள் நாம் எப்படி இருக்கிறோம்?

1. அவருக்குள் மரித்துள்ளோம் *(கொலோ. 2:20)*
2. அவருக்குள் உயிர்ப்பிக்கப்பட்டுள்ளோம் *(கொலோ. 3:1)*
3. அவருக்குள் மறைந்துள்ளோம் *(கொலோ. 3:3*
4. அவருக்குள் வேர் கொண்டுள்ளோம் *(கொலோ 2:7)*
5. அவருக்குள் பூரணமாக்கப்படுகிறோம் *(கொலோ 2:10)*

# உசியா தான் பலப்பட்டபோது தனக்குக்கேடு உண்டாகும் மட்டும் மனமேட்டிமை உள்ளவனானான்.

**S. பிச்சைமுத்து**

திருமறை ஆசான் வாசகர்களாகிய உங்கள் யாவரையும் நம்முடைய மீட்பர் இயேசுவின் நாமத்திலே வாழ்த்துகிறேன் யாவரும் சுகமாயிருப்பீர் களாக (நமது செய்திக்கான வசனப்பகுதி 2 நாளா 26:1-23) யூதாவின் ராஜாக்களிலே உசியாராஜா கவனிக்கதக்க ஒருவராய் இருக்கிறார். முழு இஸ்ரவேல் தேசத்தை ஆளுகை செய்த ராஜாக்களாகிய சவுல் ராஜா, தாவீது ராஜா, சாலமோன்ராஜா இவர்கள் ஒவ்வொருவரும் நாற்பது ஆண்டுகள் மட்டும் தான் ஆளுகை செய்தனர். ஆனால், "உசியாவோ" தனது 16 வது வயதிலேயே ஆட்சிக்கு வந்து 52 ஆண்டுகள் ஆளுகை செய்திருக்கிறார்.

நம்முடைய நாட்களில் 16 வயது வாலிபனின் செயல்பாடுகளும், சிந்தனைகளும், ஆர்வமும் எப்படிப்பட்டவைகளில் இருக்கும் என்பது தெரியாதவைகளல்ல. ஆனால், *உசியாவோ* அன்றைய நாட்களில் தேவ தரிசனங்களில் சிறந்தவரான சகரியா தீர்க்கதரிசியிடம் தேவனுக்கு பிரியமானவற்றை விசாரித்து *எருசலேமிலே மிகவும் நேர்த்தியான காரியங்களை செய்தார்.* தேவன் அவரது காரியங்களை வாய்க்கச் செய்தார் (2 நாளா 26:5-15).

## A. கர்த்தர் நமது காரியங்களையும் வாய்க்கச் செய்வார்

எப்போது என்றால்? நாம் நமது சொந்தப் புத்தியின் மேல் சாயக் கூடாது (நீதி. 3:5-7). உங்களையே புத்திசாலிகள் என்று நினைக்கக்கூடாது (ரோம 12:16) மனிதன் தனக்குதானே வழிகளை ஏற்படுத்திக் கொண்டு அதிலே நடக்ககூடாது (எரே. 10:23; நீதி. 14:12) (ரோம 15:4, 1 கொரி. 10:11) தேவன் பழைய ஏற்பாட்டு தாசர்களைக் கொண்டு நமக்கு கொடுக்கும் எச்சரிப்பு களை மறக்க கூடாது. பெரும்பாலான நேரங்களில் நமது சொந்த வாழ்க்கை யில் ஒரு காரியம் நடக்க வேண்டிய நிலையில் நாம் வேத வசனங்களையும் மறந்து விடுகிறோம். நாம் தேவனுடைய பிள்ளைகள் என்கிற நினைவே நமக்கு வருவதில்லை. பிரியமானவர்களே, காரியங்களை வாய்க்கச் செய்வது தேவனுடைய கரத்திலிருக்கிறது. சங்கீதம் 119:105ல் நாம் வாசிக்கும் படியாக வேத வசனங்களின்படியே காரியங்களை நடப்பித்தால் தேவன் நம்முடைய காரியங்களையும் வாய்க்கச் செய்வது *அவருக்கு லேசான காரியம்.*

## B. உசியா ஏன் குஷ்டரோகியானான்?

உசியா தன் வாலிப காலத்திலே தேவனை தேடிய ஒரு மனிதன், எருசலேமிலே ஐம்பத்திரண்டு ஆண்டுகள் ஆளுகை செய்த ஒரு ராஜா, எருசலேமின் மேன்மைக்காக அநேக நன்மைகளை தேசத்தில் செய்த ஒரு சிறப்பிற்குரிய மனிதன். தேவனிடத்திலே நன்மையான ஆசீர்வாதங்களை யல்லவா? பெற்று வாழ்ந்திருக்க வேண்டும் (ஆதி. 4:7) *நீ நன்மை செய்தல் மேன்மையில்லையோ* என்று சொன்ன தேவன் இப்போது தமது வாக்கை

மறந்துவிட்டாரா? அல்லது மீறிவிட்டாரா? பிரியமானவர்களே கர்த்தர் நீதியுள்ளவர் எப்போதுமே நீதிபரராகவே இருக்கிறார். பிறகு ஏன் உசியா குஷ்டரோகியானான்?.

## C. உசியா ராஜா தான் செய்யத்தகாத காரியத்தைச் செய்தான்

பழைய ஏற்பாட்டின் நாட்களில் ராஜாக்கள் என்பவர்கள் தேசத்தை ஆளுகை செய்ய வேண்டும், லேவியர்களும், ஆசாரியர்களும் தேவாலயப் பணிகளைச் செய்ய வேண்டும். இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங் களிலும் தேவாலயப் பணிகளை செய்யும்படி *லேவிகோத்திரத்தார் மட்டுமே தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டனர்.* (2 நாளா 26:17-19) ஆசாரியனாகிய அசரியாவும், ஆசாரியர்களில் பராக்கிரமசாலிகளான எண்பது பேரும் சேர்ந்து உசியா தூபங்காட்டுகிற செய்கையைக் கண்டித்தனர். அப்போது உசியா தனது மதியீனமான செய்கைக்கு மனஸ்தாபப்படுவதற்கு பதிலாக தன்னை தடுத்தவர்கள் மீது கோபப்பட்டான்.

*பிரியமானவர்களே தேவனுடைய ஊழியர்கள் வேத வசனங்களைக் கொண்டு எச்சரிக்கும் போது* நமது தவறுகளில் இருந்து மனந்திரும்ப வேண்டும் என்கின்ற சிந்தனை வந்தால் தேவனுக்கு ஸ்தோத்திரம். மாறாக, என்னை எச்சரித்த போதகரை ஒருகை பார்த்து விடுகிறேன் என்ற சிந்தனை வந்தால் *நாம் மனந்திரும்ப வேண்டிய நிலையில் உள்ளோம். உடனே மனந்திரும்ப தேவன் நம்மை எச்சரிக்கிறார்.*

## E. உசியாவைத் துணிகரம் கொள்ளச் செய்தது எது?

கர்த்தர் உசியோவோடே கூட இருந்து கொடுத்த ஆசீர்வாதங்களும், யுத்தத்திற்கு சென்ற இடங்களில் எல்லாம் கிடைத்த வெற்றிகளும் தானே! பிரியமானவர்களே, வெற்றி என்பது யாரால் கிடைக்கக்கூடியது என்று வேதத்தில் பார்க்கிறோம் (நீதி. 21:30,31). *கர்த்தருக்கு விரோதமான ஞானமுமில்லை, புத்தியுமில்லை ஆலோசனையுமில்லை, குதிரை யுத்த நாளுக்கு ஆயத்தம் ஆக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும்.* (சங். 20:7-8) சிலர் இரதங்களை குறித்தும் ........ அவர்கள் முறிந்து விழுந்தார்கள் நாங்களோ எழுந்து நிமிர்ந்து நிற்கிறோம். ஆகவே, வெற்றிகள் தேவனாலே வருகிறது

## F. நம்முடைய வாழ்க்கையில்

சத்தியத்தில் வந்த நாள் துவங்கி இந்த நாள் வரை நீங்களும் நானும் தேவனிடம் பெற்ற நன்மைகள் எத்தனை! எத்தனை!! ஆனால், *நாம் பெற்றுக் கொண்டவைகள் நமக்கு எப்படிப்பட்ட எண்ணங்களை கொண்டு வந்திருக்கிறது.* தேவரீர் எனக்கு காண்பித்த தயவிற்கு நான் எவ்வளவேனும் பாத்திரனல்ல என்று நினைக்கிறோமா? அல்லது உசியாவைப் போல நம்முடைய மனம் செய்யக் கூடாதவைகளைச் செய்யத் துணிகரங் கொள்ளு கிறதா என சிந்தித்துப் பார்ப்போம்.

## G. தாவீதை சாத்தான் ஏவிவிட்டான்

தாவீது தேவனின் இருதயத்திற்கேற்ற தாசன் (1 ராஜா 15:5, அப். 13:22) தினமும் மூன்று நேரம் ஜெபம் செய்த தாவீது (சங். 55:17) மிகுதியான சங்கீத புத்தகங்களை எழுதின தாவீது அவரையாவது, சாத்தான் பயன்

படுத்துவதாவது, என்று உங்களைப் போலவே நானும் ஆச்சர்யப்பட்டேன்! எதுவரைக்கும் என்றால் (1 நாளா 21:1-15) வாசிக்கும் வரை. சாத்தான் இஸ்ரவேலுக்கு விரோதமாய் எழும்பி இஸ்ரவேலை தொகையிடுகிறதற்குத் தாவீதை ஏவி விட்டான். இப்படி ஒரு வசனத்தை வாசித்த பிறகு நாம் நமக்கும் ஒரு எச்சரிப்பை பெறுகிறோம், அல்லவா? (1 பேதுரு 5:8) நம்முடைய எதிராளியாகிய பிசாசை லேசாக எண்ணி விடகூடாது.

## H. தாவீது செய்த தவறு என்ன?

வாருங்கள் என்னோடு கூட (1 சாமு. 17:34-36) கோலியாத்தை தாவீது மேற்கொண்ட போது தேவனுடைய நாமத்திற்கு அவமானத்தை கொண்டு வந்த கோலியாத்தை தாவீது சகித்துக் கொள்ள முடியாதவராய் இருந்தார். தன் மந்தையைத் தாக்க வந்த (கரடி, சிங்கம்) மிருகங்களில் ஒன்றைப் போல நினைத்தார். தேவனுடைய நாமத்திலே ஜெயிக்க முடியும் என்று நினைத்தார் ஜெயித்தார். *தாவீது ராஜாவாக ஆவதற்கு இச்சம்பவம் மிகப் பெரிய காரணமாயிற்று.*

தாவீதின் வாழ்வில் ஆண்டுகள் கடந்து போயிற்று ராஜ்யம் பலப்பட்டது. இப்போது தன் ராஜ்ஜியத்தில் பட்டயம் எடுத்து யுத்தம் செய்ய கூடியவர்கள் எத்தனை பேர் என்று எண்ணிக்கை பார்க்க சொன்னார். (எரேமியா 17:5) ..... மாம்சத்தை தன்புய பலமாக்கிக் கொண்டவன் சபிக்கப் பட்டவன்) தாவீதின் தவறினாலே (70, 000 பேர்) கொல்லப்பட்டார்கள்.

தேவன் மீது நம்பிக்கையாய் இருந்த தாவீதை மனுஷன் மீது நம்பிக்கை வைக்கும்படியாக சாத்தான் ஏவிவிட்டான்.

## I. பேதுருவை சாத்தான் பயன்படுத்தினான்

மத். 16:13-23 நமதாண்டவர் தன்னை யார் என்று விசுவாசிக்கிறார்கள் என்று கேட்டபோது பேதுரு தான் மிகச்சரியாக நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று மேன்மையான அறிக்கையை செய்தார். நமதாண்டவர் பேதுருவைப் பாராட்டினார். ஆனால், சிறிது நேரத்திலேயே ஆண்டவர் பேதுருவை அப்பாலே போ சாத்தானே என்றாரா ஏன் என்பதை சிந்திப்போம்.

## J. நம்முடைய வாழ்வில்

(1) என்னுடைய வாழ்வில் இத்தனை ஆண்டுகள் கடந்து வந்து விட்டேன் இனிமேலாகவா நான் பாவம் செய்யப் போகிறேன் என்கிற எண்ணத்தை கைவிடுவோம். (2) தொடர்ந்து வெற்றிகளும், சமாதானமுள்ள வாழ்க்கையும் நடைபெறும்போது உசியாவை போல எதையும் செய்யலாம் என்கிற அசட்டு தைரியங்கொள்ளாதிருப்போம். (3) லூக்கா 17:7-10 *ஒருவேளை நாம் தேவனுக்காக நிறைய காரியங்களைச் செய்திருக்கலாம்* தேவனுக்கு ஸ்தோத்திரம். நான் அற்பமான ஊழியக்காரன் செய்ய வேண்டிய கடமையை மாத்திரம் செய்தேன் என்று சொல்வோம். கனத்தையும், மகிமையையும் பிதாவாகிய தேவனுக்கு செலுத்துவோம்.

நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய கரத்தில் பிரயோஜனமான பாத்திரங்களாய் இருக்க தேவன் ஆசீர்வதிக்க வேண்டுமென்று வாழ்த்து கிறேன். சுகமாயிருப்பீர்களாக ஆமென்.



# பாடம்-26. கிறிஸ்துவின் வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?

K. பாஸ்கர்

கடந்த 2012 டிசம்பர் 21ந் தேதியோடு உலகம் அழிந்து விடும் என்று உலக மக்களில் ஒரு கூட்டம் நம்பினார்கள். அதற்கு மாயன் காலண்டரைச் சொன்னார்கள். ஆனால், உலகம் அழியவில்லை. மேலும், விஞ்ஞானிகள் 2012 டிசம்பர் 23-25 தேதிகளில் உலக முழுவதும் இருள் சூழ்ந்திருக்கும் சூரியன் இடப் பெயர்ச்சி செய்வதால் இந்த மாற்றம் ஏற்படும் என்று எல்லா வெப்சைட்களிலும் செய்தி வந்தது. ஆனால், எந்த மாற்றமும் நடைபெற வில்லை. கடந்த டிசம்பர் 23-25 தேதிகளில் சூரியன் வழக்கம் போல் கிழக்கிலே உதித்தது! இந்த கருத்துக் கனிப்புகளை பொய்யாக்கி விட்டது. இவர்களைப் போல கிறிஸ்தவ பாஸ்டர்களும் கிறிஸ்துவின் வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் இப்பொழுது சில அடையாளங்கள் நடந்து வருகிறது என்று கூறி வருகிறார்கள்! அதற்கு மத்தேயு 24ம் அதிகாரத்திலுள்ள அடையாளங்களான யுத்தங்களும், ராஜ்யத்திற்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும், பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் என்று சுட்டிக்காண்பிக்கின்றார்கள். அன்பான வாசகர்களே மத். 24ல் சொல்லப்பட்டுள்ள அடையாளங்கள் கிறிஸ்துவின் வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் சொல்லப்பட்டுள்ளதா என்பதை நாம் இப்போது கவனிப்போம்.

## I கிறிஸ்து கூறும் அடையாளம் எதை அர்த்தப்படுத்துகிறது? [மத். 24:1–35]

இயேசு தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டுப் போகையில் அவருடைய சீஷர்கள் தேவாலயத்தின் கட்டிடங்களை அவருக்குக் காண்பிக்க அவரிடத்தில் வந்தார்கள். அவ்வளவு பிரம்மாண்டமாக கட்டப்பட்டிருந்தது. அதின் ஒரு கல் 70 அடி நீளம், 12 அடி உயரம், 18 அடி அகலம் கொண்டதாக இருந்தபடியால் சீஷர்கள் இந்த அற்புதமான எருசலேம் தேவாலயத்தை காண்பிக்க வந்தார்கள்.

அவருடைய சீஷர்களில் ஒருவன் அவரை நோக்கி: போதகரே இதோ இந்தக் கல்லுகள் எப்படிப்பட்டது? இந்தக் கட்டிடங்கள் எப்படிப்பட்டது? பாரும் என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தமாக "இந்த பெரிய கட்டிடங்களைக் காண்கிறாயே ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப் போகும்" என்றார். பின்பு அவர் தனித்து உட்கார்ந்திருக்கையில், பேதுருவும், யாக்கோபும், யோவானும், அந்திரேயாவும் தனித்து வந்து இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? இவைகள் எல்லாம் நிறைவேறுங் காலத்துக்கு அடையாளம் என்ன? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? என்றார்கள் (மத். 24:1-3; மாற். 13:1-4).

சீஷர்கள் இரண்டு விதமான கேள்வியை இயேசுவினிடத்தில் கேட்டனர். ஒன்று இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? அதாவது, எருசலேம் மற்றும் அதன் தேவாலயம் எப்பொழுது அழிக்கப்படும். இதன் அழிவுக்கு அடையாளம் என்ன? என்று கேட்டனர் (மாற்கு 13:4) இரண்டாவது கேள்வி: உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? என்று கேட்டார்கள். இரண்டு கேள்விகளுக்கும் இயேசு கிறிஸ்து பதில் சொல்லுவதை மத். 24:, மாற்கு 13:, லூக். 21:5-36. இந்த வசனங்களில் உள்ளன. சீஷர்கள் முதலில் கேட்ட கேள்விக்கு, அதாவது எருசலேம் அழிவுக்கு முன் அடையாளம் என்ன? என்ற கேள்விக்கு ஆண்டவர் பதில் சொல்லுவதைக் கவனியுங்கள்.

## II எருசலேமின் அழிவு (மத். 24:4-35)

எருசலேம் அழிவைக் குறித்து இயேசு கிறிஸ்து கூறுகின்றார். அதன் அழிவுக்கு முன்னதாக சில அடையாளங்களைக் கூறுகின்றார். இதன் அடையாளத்தைத்தான் கிறிஸ்துவின் வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் முடிச்சுப்போட்டு அநேக பாஸ்டர்கள் சொல்லி வருகின்றனர். எருசலேம் அழிவுக்கு முன் சில அடையாளங்களாவன :

கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக் கொண்டு நானே கிறிஸ்து என்று சொல்லி அநேகரை வஞ்சிப்பார்கள், யுத்தங்களையும், யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள். ஆனாலும் எருசலேமின் அழிவு உடனே வராது. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோத மாய் ராஜ்யமும் எழும்பும். பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். இவைகள் எல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம். அப்பொழுது உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து உங்களைக் கொலை செய்வார்கள். என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள். அநேகங் கள்ளத் தீர்க்க தரிசிகள் எழும்புவார்கள். அக்கிரமம் மிகுதியாகும் அநேகருடைய அன்பு தணிந்து போகும். ஆனாலும், உங்கள் தலைமயிர் ஒன்றாகிலும் அழியாது. எருசலேம் ரோமப்படைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும்போது அதின் அழிவு சமீபமாயிற்று என்று அறியுங்கள் (லூக். 21: 18-20).

இயேசு சொன்ன இந்த அடையாளங்கள் எல்லாம் எருசலேம் அழிவுக்கு முன் நடந்தது என்று அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் தெளிவாக உள்ளது. கிறிஸ்தவர்கள் மிகவும் கொடுமைப்படுத்தப் பட்டார்கள். எருசலேம் அழிவுக்கு முன் ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாக பிரசங்கிக்கப்படும் அப்பொழுது எருசலேம் மற்றும் அதன் தேவாலயம் அழிவுக்கு முடிவு வரும் என்று இயேசு சொன்னார் (மத். 24:14).

கி.பி. 33ல் சபை ஸ்தாபிக்கப்பட்டு அப்போஸ்தலர்கள் உலகமெங்கு போய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர். சுவிசேஷத்தினிமித்தம் பல கொடுமைகளுக்கும், கொலை செய்யப்படுதலுக்கும் ஆளானார்கள் இருப்பினும் கி.பி. 70க்கு முன்னாடியே சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டுவிட்டதாக பவுல் எழுதுகிறார் (கொலோ. 1:23).

எருசலேம் அழிக்கப்படுவதற்கு இயேசு கிறிஸ்து பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன வசனத்தை நினைவுபடுத்துகிறார். மேலும், பாழாக்குகிற அருவருப்பைக் குறித்து தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறாரே, வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (தானி. 9:26,27) நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும் போது யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள். பரிசுத்த ஸ்தலமாகிய எருசலேம் தேவாலயம் ரோமப் படைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும்போது எருசலேமை விட்டு ஓடிப்போங்கள் என்று தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னார் (மத். 24:15,16; லூக். 21:20).

மேலும், அவர், அவர்களிடத்தில் வீட்டின் மேல் இருக்கிறவன் தன் வீட்டிலே எதையாகிலும் எடுப்பதற்கு இறங்காதிருக்கக்கடவன், வயலில் இருக்கிறவன் தன் வஸ்திரங்களை எடுப்பதற்கு திரும்பாதிருக்கக்கடவன். அதாவது, எருசலேம் நகருக்குப் புறம்பே இருந்தால் நகருக்குள் திரும்பி வரவேண்டாம். நகருக்கு வெளியே ஓடிவிடுங்கள் என்று வலியுறுத்தினார் (மத். 24:17,18). அந்நாட்களில், அதாவது எருசலேம் அழிவின் நாட்களில் கர்ப்பவதிகளுக்கும், பால்கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ! அதாவது ஆபத்து வரும் (மத். 24:19).

அந்நாட்களில் கர்ப்பமாக இருக்கும் கிறிஸ்தவ பெண்களுக்கும், சிறு குழந்தைகளை வைத்திருக்கும் தாய்மார்களுக்கும் பயணம் கூடாது. ஆகவே, ஆண்டவர் அவர்களுடைய நலன் கருதி நீங்கள் ஓடிப்போவது மாரி காலத்திலாவது (மழைக்காலம்) ஓய்வு நாளிலாவது சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள் (மத். 24:28) என்றார். இதன்படி கிறிஸ்தவர்களின் ஜெபம் கேட்கப்பட்டது. எருசலேம் அழிவு மழைக்காலத்தில் நிகழவில்லை. கி.பி. 70ல் ரோமப் படைகள் வசந்த காலத்தில் வந்தனர் என்று முதல் நூற்றாண்டு சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

எருசலேம் மற்றும் தேவாலயம் அழிவு மிகவும் பயங்கரமாக இருக்கும். ஏனெனில், உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேல் சம்பவிக்காததுமாகிய அது பயங்கரமாக இருக்கும். சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும். வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும் என்றார் (மத். 24:21,31).

அழிவைக் குறித்து வேதம் கூறும்பொழுது அழிவின் பயங்கரத்தை விவரிக்க சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் போன்றவைகளை உருவகப் படுத்துவதுண்டு. உதாரணமாக பாபிலோன் அழிவு, ஏதோமின் அழிவு, எகிப்தின் அழிவு (ஏசா. 13:1,9-11, ஏசா. 34:4,5; எசே. 32:2,7,8) இந்த தேசங்கள் அழிக்கப்படும் பொழுது தேவன் வந்தார் (ஏசா. 19:1) அதுபோல எருசலேம் அழிக்கப்படும் பொழுது இயேசு கிறிஸ்துவும், தூதர்களும் வந்தனர். எருசலேம் மற்றும் தேவாலயம் அதன் மகிமையின் ஒளி ஆகியவை அழிக்கப் பட்டது. அப்போதிருந்த சந்ததி அந்த அழிவை நேரில் கண்டது. இயேசு கிறிஸ்து சொன்ன எல்லா அடையாளங்களும் எருசலேம் அழிவுக்கு முன் அதாவது, கி.பி. 70க்கு முன் நடந்தேறின. கி.பி. 70ல் தீத்துராயனால் எருசலேம் அழிக்கப்பட்டது. இயேசுவின் எச்சரிப்பைக் கேட்ட எல்லா சீஷர்களும் எருசலேமை விட்டு வெளியேறினார்கள். அப்போஸ்தலர்கள் யாரும் எருசலேமில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## III கிறிஸ்துவின் வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?

சீஷர்கள் கேட்ட இரண்டாவது கேள்வியானது உம்முடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? என்பது. அதற்கு இயேசு அந்த நாளையும், அந்த நாழிகையும் என் பிதா ஒருவரைத் தவிர மற்றொருவனும் அறியான் பரலோகத்திலிருக்கிற தூதர்கள் அறியார்கள். குமாரனும் அறியார், அக்காலத்தை நீங்கள் அறியாத படியால் எச்சரிக்கையாயிருந்து விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் என்றார் (மத். 24:36-51; மாற்கு 13:32,33).

அவரது வருகை மற்றும் உலகத்தின் முடிவின் அடையாளத்தைப் பற்றி சீஷர்கள் கேட்டிருந்தார்கள். ஆனால், இயேசு கிறிஸ்து இதற்கு எந்த அடையாளமும் இல்லை என்று பதில் கூறிவிட்டார். பழைய ஏற்பாட்டில் நடந்த நிகழ்ச்சியை உதாரணம் கூறுகின்றார்.

நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும். எப்படியெனில், முந்தைய ஜலப்பிரளயத்துக்கு முன்னாள் காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள் வரைக்கும் ஜனங்கள் புசித்தும், குடித்தும் பெண் கொண்டும், பெண் கொடுத்தும் ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக் கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள். அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும் என்றார். நோவா காலத்தில் ஜலத்தினாலே இந்த உலகை அழிப்பேன் என்று தேவன் சொன்னார். அதற்கு எந்த அடையாளமும் கொடுக்கப்படவில்லை. தேவனு டைய எச்சரிப்பை அசட்டை பண்ணி, புசித்தும், குடித்தும், திருமணங்கள் செய்வதும் இப்படி வழக்கமான காரியத்தில் ஈடுபட்டிருக்கும் போது திடீரென்று ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் அழித்துப் போட்டது. தேவனுக்குப் பயந்து அவருடைய நீதியைச் செய்த நோவாவையும் அவரது குடும்பத்தினரையும் அவரோடிருந்த மிருக ஜீவன்களும் மட்டும் பேழைக்குள் காப்பாற்றினார். அதுபோல கிறிஸ்துவின் வருகையும் திடீரென்று இருக்கும். எந்த அடையாளமும் கொடுக்கப்படவில்லை. அப்பொழுது இரண்டு பேர் வயலில் வேலை செய்து கொண்டிருப்பார்கள். ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான். அதாவது, பரலோகத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கை விடப்படுவான். அதாவது, தேவனிடத்திலிருந்து பிரிந்து நித்திய நரகத்திற்கு போவான் என்று கூறுகின்றார் (மத். 24:37-41). எனவே, உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவார் என்று நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள், நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார் ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள் (மத். 24:42-44) அவர் வரும்போது உலகத்திற்கு முடிவு வரும் (2 பேதுரு 3:10). ஆகவே, கிறிஸ்து வின் வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் எந்த அடையாளமும் கொடுக் கப்படவில்லை என்பதை சிந்தித்து தவறான வழியிலிருந்து சத்தியத்திற்கு மனந்திரும்புவோம்.

(தொடரும்)

# BIBLE MEDITATION

## TV PROGRAM

TAMILAN TV - Saturday 7.15 am.

TAMILAN TV - Thursday 9.30 pm.

TAMILAN TV - Monday 7.00 am.


## நாளும் நடப்பும்


1. 10 ஆண்டுகளுக்கு பின் இரயில் கட்டணம் உயர்வு.
2. எல்லையில் 2 இராணுவ வீரர்களைக் கொன்ற பாகிஸ்தானுக்கு இந்தியா கடும் எச்சரிக்கை.
3. மாநிலம் முழுவதும் சமமான மின் பகிர்வு தேவை.
4. மூன்று வடகிழக்கு மாநிலங்களில் தேர்தல் தேதி அறிவிப்பு.
5. எந்தப் படிப்பாக இருந்தாலும் சிறப்பாகப் படிக்க வேண்டும் – அண்ணா பல்கலைக்கழக வேந்தர்.
6. முதல் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா போராடித் தோற்றது.



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**


| LANGUAGE | DAYS | TIME P.M. | Service | SPEAKER |
|---|---|---|---|---|
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Srilanka all Asia Service: SW 25 & 41 M | **P.R. Swamy**<br>Cell : 09844070763 |
| TAMIL | Saturday | 5.30 PM | Srilanka all Asia Service: SW 25 & 41 M | **B. Arjunan**<br>Cell : 9443558041 |





Regd. News Paper RNI No. 47661/87
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.

Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014




# திருமறை தியானம்


## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு | 10:00 | மணி |
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |


தபால் செலவிற்கு பணம் அனுப்பி
இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்


சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

கீழ்க்காணும் கைப்பிரதிகள் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.






# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.